# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 22 செவ்வாய்க்கிழமை (06-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:224




கரும்புலிகள் தினத்தையொட்டி வன்னியில் பிரத்தியேக இடம் ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு சுடர் ஏற்றுவதையும் அகவணக்கம் செலுத்துவதையும் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# புலிப் போராளிகளை இலக்குவைத்து மட்டக்களப்பில் இரு தாக்குதல்கள்

## ஒருவர் உயிரிழப்பு; மூவர் காயம்; நகரப் பொறுப்பாளர் கவலைக்கிடம்

மட்டக்களப்பு,ஜூலை6

**கரும்புலிகள் தினமான நேற்று மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிராயுத பாணிகளாகச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை இலக்குவைத்து ஏறத்தாழ ஒரே சமயத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் வைத்துத் துப்பாக்கித் தாக்குதல் சம்பவங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.**

**வந்தாறுமூலைப் பகுதியில் நடந்த தாக்குதலில் போராளி ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமுற்றார். மட்டக்களப்பு நகரப் பகுதியில் நடந்த தாக்குதலில் நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜாவும் மற்றொரு போராளியும் காயமுற்றனர். அவர்களில் சேனாதிராஜாவின் நிலைமை கவலைக்கிடமாக இருந்தது.**

கரும்புலிகள் தினமான நேற்று இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மட்டு.நகரில் அரசடிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தேவநாயகம் மண்டபத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மாவீரர் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்திப் பவனிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக நேற்றுக்காலை 9.15 மணியளவில் நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜா (வயது 32), மட்டு. - அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் (வயது 32) ஆகியோர் மோட்டார் சைக்கிளில் வந்தனர்.

அரசடிச் சந்திக்குச் சமீபமாக - தேவநாயகம் மண்டபத்துக்கும் முன்பாக - அரசியல்துறை அலுவலகத்தில் இருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் வைத்து - வேறு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர், அவர்கள் இருவர் மீதும் கைத்துப்பாக்கியால் வேட்டுக்களைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில் மூன்றாவது வினாத்தாள் நாளைய உதயனுடன் வெளிவருகின்றது.

பிரதி புதன்கிழமைகள் தோறும் தொடர்ந்து வினாத்தாள்கள் வெளிவரும். வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணிமனையில் அலுவலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## மட்டு. சம்பவங்களுக்கு அரசுத்தரப்பு கவலை

கொழும்பு,ஜூலை6

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் ஒருவர் உயிரிழக்கவும் மற்றும் சிலர் காயமடையவும் நேரிட்டமை குறித்து அரசு கவலை கொண்டுள்ளதாக ஜனாதிபதிச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## போரைத் தொடங்கப் படையினர் முயற்சி; யுத்தநிறுத்தத்தைப் புலிகள் பேணுவர்

### மட்டு-அம்பாறை அரசியல்துறை அறிக்கை

"ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழி வகை செய்து வருகின்றனர். ஆனால், நாங்கள் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டு சமாதான ஒப்பந்தத்தை மதித்துப் பேணிக் காப்போம் என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறோம். ஆனால், எம்மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால் நாம் அதை எதிர்கொள்ளத் தயார்."

- இப்படி அறிவித்திருக்கிறார்கள் விடுதலைப் புலிகள்.

நேற்று மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்த இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறையினர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் விகாரையில் 14 தமிழ்இளைஞர்கள் கைது!

கொழும்பு,ஜூலை6

பொலன்நறுவை மாவட்டம் ஹிங்குராங்கொட என்ற இடத்தில் உள்ள விகாரை ஒன்றில் ஆயுதங்களுடன் தங்கியிருந்த 14 தமிழ் இளைஞர்களை நேற்றிரவு பொலீஸார் கைதுசெய்தனர். விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணாவின் சகாக்களே இவர்கள் என்று கூறப்படுகிறது.

புபல விகாரையில் தங்கியிருந்த இவர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த விகாரைக்குப் பொறுப்பான பிக்கு ஜாதிகஹெல உறுமய கட்சியின் ஆதரவாளர் என்று தெரியவந்துள்ளதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ஜாதிக ஹெல உறுமய தலைமைப்பீடத்தின் அறிவுறுத்தலின்படியே இந்தப் 15 பேரையும் விகாரையில் தங்க, தான்

(16ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் நேற்று எழுச்சியுடன் கரும்புலிகள் நாள் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை6

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினம் குடாநாடெங்கிலும் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

குடாநாட்டில் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வு, முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய இடமான நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உள்ள மில்லர் சதுக்கத்தில் இடம்பெற்றது.

முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய இடமான நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மாலை 6 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.தயா ஏற்றி வைத்தார். பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் தமிழரசி ஏற்றினார்.

தொடர்ந்து நெல்லியடிச் சந்தியிலிருந்து மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் ஊர்வலமாகக் கரும்புலிகள் கப்டன் மில்லர், முதற் பெண் கரும்புலி அங்கயற்கண்ணி மற்றும் கரும புலிகளின் பொதுச்சின்னம் ஆகியவை முன்னணியில் சுமந்துவரப்பட பின்னால் கரும்புலிகளின் உருவப்படங்கள் தாங்கிய ஊர்தியும் கரும் புலித தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனத்தின் மாதிரியும் நகர்ந்தன. இந்த ஊர்வலத்தில் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்பினர் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் சதுக்கத்தை அடைந்ததும் கப்டன் மில்லர் தாக்குதல் நடத்திய நேரமாகிய இரவு 7.35 மணிக்கு (பழைய நேரம் 7.05) ஈகச்சுடரினை கப்டன் மில்லரின் தாயார் திருமதி வல்லிபுரம் - கமலாதேவி ஏற்றிவைத்தார். கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவச் சிலைக்கு அவரது தாயார்

**படங்கள் 16 ஆம் பக்கத்தில்**

திருமதி வல்லிபுரம், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா ஆகியோர் மாலை அணிவித்தனர்.

கரும்புலிகள் நினைவுத் திருவுருவப் படத்திற்கான பொதுச் சுடரினை வடமராட்சிக் கோட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார். அதற்கான மலர் மாலையினை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.சிவனேசன், எம். கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து கப்டன் மில்லர் ஞாபகார்த்த நினைவுக் கல்லூரிக்கு யாழ். மாவட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், வடமராட்சிக்கோட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.தர்மலிங்கம் ஆகியோர் மலர் மாலைகளை அணிவித்தனர். தொடர்ந்து கரும் புலிகளின் பெற்றோர்கள் சுடரேற்றி மலர்மாலை அணி

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



தென்மராட்சிக் கோட்டத்திற்கான கரும்புலிகள்தின நிகழ்வு நேற்றுக்காலை சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தினருகே இடம்பெற்றது. நிகழ்வில் பொது ஈகச்சுடரினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தென்மராட்சி எழுச்சிப் பேரவை செயலாளர் க.சந்திரசேகரா ஆகியோர் ஏற்றுவதையும் கரும்புலிகள் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்த நினைவு மண்டபத்தை யாழ். மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், எஸ்.சிவநாத், யாழ். எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் எஸ்.கனகலிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதையும் - நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

# தமிழர் தாயகத்தில் கரும்புலிகள் தினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஆகுதியாக்கி வரலாறு படைத்த கரும்புலிகள் நினைவுதினம் நேற்று வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதி எங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் கரும்புலிகள் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகள் யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அத்துடன், விடுதலைப் போராட்டத்தைச் சித்திரிக்கும் வகையில் சோடனைகள், பதாகைகள் மற்றும் நினைவுப் படிகங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

**அம்பாறையில்...**

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான கல்முனை, காரைதீவு, திருக்கோவில், தம்பிலுவில், ஆலையடிவேம்பு போன்ற இடங்களில் கரும்புலிகள் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

இங்கு கரும்புலிகளின் தியாகத்தை நினைவுகூர்ந்து பல்வேறு வகையான கண்காட்சிகளும் இடம்பெற்றன. அத்துடன், கரும்புலிகளின் திருவுருவப் படங்களும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களும், போராளிகளும், கரும்புலிகளின் பெற்றோர்களும், உறவினர்களும், பெருந்தொகையான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

**மட்டக்களப்பில்...**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான பழுகாமத்தில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரமேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் உணர்வெழுச்சியுடன் பங்குபற்றினர்.

இதேவேளை, கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நேற்று ஆரையம்பதியில் அமைதிநிலை அனுஷ்டிக்கப்பட்டது. அரச, தனியார் காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. போக்குவரத்து சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. பிரதான வீதியில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

**திருகோணமலையில்...**

திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நிகழ்வு சேனையூர் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் ரட்ணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருமலை மாவட்ட எம்.பி. க.துரைரட்ணசிங்கம், புலிகளின் மூதூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்கன், மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் ஜாலிகை உட்பட போராளிகளும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

புலிகளின் மூதூர் பிரதேச நிர்வாகப் பொறுப்பாளர் பிரகாஷ் ஈகச்சுடர் ஏற்றினார். திருமலை மாவட்ட புலிகளின் வனவளப் பொறுப்பாளர் வேந்தன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இங்கு கரும்புலிகளின் திருவுருவப்படங்கள் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு திருமலை நகரம் உட்பட பல்வேறு இடங்களும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கரும்புலிகளின் பெற்றோருக்கு இந்நிகழ்வில் விசேட கௌரவமளிக்கப்பட்டது. திருகோணமலை சிவன்கோவில் முன்றிலிலும் கரும்புலிகள் தின நிகழ்வு இடம்பெற்றது.

**வவுனியாவில்...**

கரும்புலிகள் நினைவுதின நிகழ்வுகள் வவுனியாவிலும் வெகுசிறப்பாக இடம்பெற்றன. வவுனியா - உக்குளாங்குளம் பைட்டர் மைதானத்தில் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன.

கரும்புலிகள் தினம் காரணமாக வவுனியா நகர் நேற்று முற்றுமுழுதாக செயலிழந்திருந்தது. வவுனியா நகரின் கடைகள் அனைத்தும் மூடப்பட்டு, நகர் வெறிச்சோடிக்கிடந்தது. அரச, தனியார் வங்கிகள் எதுவும் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது. அரச, தனியார் நிறுவனங்கள் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச சோடிக்காணப்பட்டன.

வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வாகனப்போக்குவரத்து மிகவும் குறைவாக இருந்தது. வெளியிடங்களில் இருந்து வந்தவர்களும், வெளியிடத்திற்குப்போக இருந்தவர்களும் பெரும் சிரமத்திற்கு முகங்கொடுத்தனர்.

**மன்னாரில்...**

மன்னார் நகரில் நேற்று கரும்புலிகள்தினம் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் நகரம் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. வீர வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளும் நகரை அலங்கரித்திருந்தன.

மன்னார் - அரிப்புத்துறை பாடசாலை மைதானத்தில் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வு நடைபெற்றது.

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், நகரப் பொறுப்பாளர் முடிவேந்தன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் யாழவன் உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்களும், போராளிகளும் பங்குபற்றினர்.

வீரமரணமடைந்த கரும்புலிகளின் பெற்றோர், நிகழ்வு மேடைக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கரும்புலிகளின் நினைவுதின நிகழ்வில் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க-164)

# துணைப்படைக்கு ஆள்சேர்க்க கால அவகாசம் மேலும் நீடிப்பு

பளை,ஜூலை6

தமிழீழத் தேசியத் துணைப்படைக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான கால அவகாசம் எதிர்வரும் 20ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டிருக்கின்றது என்று தமிழீழக் காவல்துறை நடுவப்பணியகம் அறிவித்திருக்கிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களிலிருந்து நேரடியாகவும் தொலைபேசிமூலமாகவும் ஏராளமானோர் கேட்டுக்கொண்டதற்கு அமைவாகவே இந்தத் திகதி நீடிப்புச் செய்யப்பட்டிருப்பதாக நடுவப்பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நேர்முகத்தேர்வு கடந்த 30ஆம்திகதியுடன் முடிவடைந்திருக்கின்றது. எனினும், இன்றுமுதல் எதிர்வரும் 20ஆம்திகதிவரை மீண்டும் நேர்முகத்தேர்வு இடம்பெறும் எனவும்- அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

கடந்தமாதம் இடம்பெற்ற நேர்முகத்தேர்வுகளில் ஏராளமானோர் கலந்துகொண்டிருந்தனர் எனவும் -

அவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தமிழீழத் தேசியத் துணைப்படையில் இணைக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் -

காவல்துறை நடுவப்பணியக முக்கியஸ்தர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-4)

## நாடாளுமன்றத்தை முன்னதாக கூட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை6

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாகக் கூட்டுவது தொடர்பாகப் பிரதமரைச் சந்தித்துக் கோரிக்கை விடுக்க வேண்டுமென்று ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்க்கட்சிகள் தீர்மனித்திருக்கின்றன.

சபாநயாகர் தலைமையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர், நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இதில் இணக்கம் காணப்படவில்லை. இதையடுத்தே பிரதமரைச் சந்தித்து அதற்கான கோரிக்கையை விடுப்பதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்ய முயற்சிப்பது, டெங்குக் காய்ச்சல் பரவுவது போன்ற விடயங்கள் குறித்து விவாதம் நடத்துவதற்கு 20 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நேற்றைய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முன்வைத்தார்.

கரு ஜெயசூரியவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள், நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டுவதற்கு போதியனவாக இல்லை என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அரச தரப்பில் கலந்துகொண்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## கத்தி வைத்திருந்த நபருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம்,ஜூலை6

தடைசெய்யப்பட்ட கூர்க்கத்தியைத் தனது உடையின் கீழ் மறைத்துவைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். நீதிமன்ற நீதிவான் ஒருவருக்கு மூன்று வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடக்கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த சண்முகராசா சூரியகுமார் என்பவர் கோப்பாய் பொலீஸ் நிலையத்திற்கு கத்தியைக் கொண்டு சென்றமைக்காக அவருக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவினால் இத்தண்டனை வழங்கப்பட்டது. (ஒ-ரி)

## தமிழகத்தில் கைதான இலங்கை மீனவர் விடுதலை

இந்தியக் கடற்பிராந்தியத்துக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு இந்தியக் கடலோரக் காவற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 18 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழில் நீர்வள பிரதி அமைச்சர் நிஷால் கலப்பதி, விடுவிக்கப்பட்ட மீனவர்களைக் கடந்த 2 ஆம் திகதி தலைமன்னார் கடற்படை இறங்குதுறையில் பொறுப்பேற்றார்.

கடந்த மாதம் 2 ஆம் திகதி, 40 படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த இந்தக் கடற்றொழிலாளர்களை, இந்தியக் கடலோரக் காவற்படையினர் கைதுசெய்தனர்.

சூழி ஒன்றினுள் அகப்பட்ட மீன்பிடிப்படகுகள், இந்தியக் கடல் எல்லைக்குள் இழுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஒ-9)

## அஷ்ரப் காங்கிரஸ் கண்டனம்!

கொழும்பு,ஜூலை6

முஸ்லீம் காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்கள், நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பெறுவதற்காக ஐ.தே.கவின் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர் என்று வெளியாகியிருக்கும் செய்தி குறித்து அஷ்ரப் காங்கிரஸ் கவலை தெரிவித்து ஊடகச் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்த விடயம் குறித்து மௌனத்தைக் கடைப்பிடிப்பது, யாப்புக்கு முரணான இந்தச் செயலை அவர் ஆதரிப்பதாகத் தெரிகிறது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகையில் -

தமது கட்சியின் யாப்பின் பிரகாரம் எந்த ஓர் உறுப்பினரும் மற்றுமொரு கட்சியின் அங்கத்தவராக முடியாது என்று தெரிவித்தனர். (ஒ-9)

## மருத்துவ பீட மாணவி இன்றுமுதல் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட நிர்வாகத்திடம் 5 கோரிக்கைகளை முன் வைத்து இன்றுமுதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதாக மருத்துவபீட மாணவியான கி.புஷ்பமாலா என்பவர் அறிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளவிருந்தார் என்றும்-

ஆனால், மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் வேண்டுகோளை ஏற்று அதனைக் கைவிட்டார் என்றும் -

ஆனால், தனது கோரிக்கைகளுக்கு தகுந்த பதில் கிடைக்காததால் போராட்டத்தை ஆரம்பிப்பதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)

## களனி மாணவர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

சமாதானத்தை வலியுறுத்தி களனிப் பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தது.

அங்கு வருகை தந்த அவர்கள், பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். (6)

**ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்று**

# 4 மாதங்களில் 353 படுகொலைகள்; 344 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள்

## பட்டியலிடுகின்றார் முன்னாள் அமைச்சர் அமரதுங்க

கொழும்பு,ஜூலை6

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்ற முதல் நான்கு மாதங்களில் நாட்டில் 344 பாலியல் வல்லுறவுச்சம்பவங்களும், 353 படுகொலைகளும் இடம்பெற்றுள்ளன. இவை பதியப்பட்டவை. பதியப்படாமலும், வெளிவராமலும் இருக்கும் படுகொலைகளும், பாலியல் வன்முறைகளும் இதைவிட ஏராளம் என்கின்றார் முன்னாள் உள்துறைப்பாதுகாப்பு அமைச்சரான ஜோன் அமரதுங்க.

நேற்றுக்கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஜோன் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

முன்னைய அரசின் காலத்தில் சட்டமும், ஒழுங்கும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனைச்சீர் செய்ய வேண்டும் என்பதாலேயே பாதுகாப்பு அமைச்சையும், உள்துறைப்பாதுகாப்பு அமைச்சையும் தான் பொறுப்பேற்றார் என ஜனாதிபதி கூறினார்.

ஆனால், ஒரு பெண் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றவுடன் 344 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகியுள்ளனர். ஜனவரி-83 பேர், பெப்ரவரி-88 பேர், மார்ச் 64 பேர், ஏப்ரல் 118பேர் என முதல் நான்கு மாதங்களில் 353 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 298 வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளன. ஐந்நூறுக்கும் மேற்பட்ட கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றைத் தடுப்பதற்கு ஜனாதிபதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, தொங்கிக்கொண்டிருக்கும் ஆட்சியைத் தக்க வைக்கும் நோக்குடன் - பெரும்பான்மையைப் பெறுவதற்காகவே முழு நேரத்தையும் செலவிடுகின்றார். தமது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவரது கவலை. நாட்டைப்பற்றியதல்ல - என்றும் ஜோன் அமரதுங்க குற்றஞ்சாட்டினார்.

# ஈராக்கிற்குள் தீவிரவாதிகள் நுழைவதை தடுக்க அயல் நாடுகள் தவறிவிட்டன

## வெளிநாட்டமைச்சர் குற்றஞ்சாட்டுகிறார்

பக்தாத்,ஜூலை6

நாட்டுக்குள் தீவிரவாதக் குழுக்கள் நுழைவதைத்தடுக்க அயல்நாடுகள் தவறிவிட்டன வென்று ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது.

பல நாடுகள் எல்லைகளில் ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்குறுதிகள் வழங்கியிருந்தன. ஆனால், அவை செயற்படுத்தப்படவில்லை என்று வெளிநாட்டமைச்சர் ஹொஷ்யார் செபாரி தெரிவித்தார். ஆனால், இப்படியான தீவிரவாதக் குழுக்களுக்கு ஆதரவு வழங்கும் கொள்கையை எந்தவொரு நாடும் பின்பற்றுவதற்கான ஆதாரம் இல்லையென்றார் அவர்.

ஈராக்கின் ஸ்திரத்தன்மையை கொடுக்க உதவுவதை அதன் அயல்நாடுகளுக்கு எதிரான ஓர் ஆபத்தான விளையாட்டாக முடிந்துவிடும் என்று ஜோர்தானிய மன்னர் அப்துல்லா கருத்து வெளியிட்டிருக்கிறார். ஈராக்கின் ஸ்திரத் தன்மை குலையுமானால் அது அயல்நாடுகளையும் பாதிக்கும் என்று மன்னர் அப்துல்லா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சில நாடுகளின் ஊடாகவே வெளிநாட்டுத் தீவிரவாதப் பேரணிகள் இங்கு நுழைந்திருக்கிறார்கள். இவர்கள் வானத்திலிருந்து குதிக்கவில்லை என்று வெளிநாட்டமைச்சர் ஹொஷ்யர் செபாரி கூறினார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய செபாரி, வெளிநாட்டுத் தீவிரவாதப் போராளிகள் ஈரான், சிரியா, துருக்கி, சவூதி அரேபியா, குவைத மற்றும் ஜோர்தான் முதலிய நாடுகளின் வழியாகவும் ஈராக்குடன் எல்லையைக் கொண்டுள்ள எல்லா நாடுகளின் வழியாகவும் ஈராக்குக்குள் நுழைகின்றார்கள என்று செபாரி கூறியிருந்தார்.

அமெரிக்கருடன் பகை தீர்த்துக்கொள்வதற்காக அவர்கள் வெளிநாடுகளிலிருந்து நுழைகின்றார்கள் என்றார் - அவர்.

குவைத் போன்ற நாடுகள் ஒத்துழைப்பதாக வாக்களித்திருந்தாலும் அந்நாட்டவர்கள் பயங்கரவாத வலைப்பின்னலில் சேர்ந்து கொண்டுள்ளனர் என்று கூறிய செபாரி, எல்லை நாடுகளுடனான இந்தப் பிரச்சினையை அமெரிக்காவின் தலையீடு இல்லாமலே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

இது ஈராக்கின் வேலை, பொருத்தமான சமயத்தில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்றார் - அவர். (ப-8)


## அமெரிக்க வீரரை கொலை செய்யவில்லை என்கின்றனர் கிளர்ச்சியாளர்கள்

அமெரிக்க கடற்படை வீரர் ஒ...வரைக் கழுதத்தைத் துண்டித்துக் கொன்றுவிட்ட...ள் என்று வெளிவந்த செய்தியை இஸ்லாமியக் கிளர்ச்சிக் குழுவொன்று மறுத்துள்ளது.

வாசெப் அலிஹசன் என்ற அந்த அமெ...வரர் கிளர்ச்சியாளர்களால் கொலைப் பயமுறுத்தலுக்குள்ளாக்கப்படும் படமொன்று முன்னர் தொலைக்காட்சியில் காட்டப்பட்டிருந்தது.

அவருக்கு என்ன நடந்தது என்பதை அறிய அமெரிக்க அதிகாரிகள் முயன்று கொண்டிருந்த வேளையில் அன்சார் அல்சன்னாவின் இராணுவம் அவரைக் கொன்றுவிட்டதாக செய்திவெளிவந்தது. ஆனால், அச்செய்தியில் உண்மையில்லை என்று அந்த இயக்கம் அறிவித்துள்ளது. இந்த இரண்டு செய்திகளையும் உறுதிப்படுத்த முடியாமல் அதிகாரிகள் திணறிக்கொண்டுள்ளனர். (ப-8)

உலக அரங்கில்



அமெரிக்காவின் சுதந்திரதினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது. அதையொட்டி இடம்பெற்ற வாணவேடிக்கைக் காட்சிகள் இவை.

## இந்திய நாடாளுமன்றில் அமளிதுமளி இரு அவைகளும் ஒத்திவைப்பு

புதுடில்லி,ஜூலை6

இந்திய மத்திய அமைச்சரவையில் உள்ள கறைபடிந்தவர்களை பதவி நீக்கக் கோரி பா.ஜ.க. போராட்டம் நடத்தியதால் நேற்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை தொடங்கியதும் தெலுங்கு தேசம் கட்சியின் எர்ரான் நாயுடு எம்.பி. பதவி ஏற்றார். அதன் பின்னர், கறைபடிந்த மத்திய அமைச்சர்களை பதவி நீக்குமாறு பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பிக்கள் கோஷமிட்டனர். இப்பிரச்சினையை பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான விஜய்குமார் மல்கோத்ரா முதலில் எழுப்பினார். உறுப்பினர்களை அமைதிப்படுத்த சபாநாயகர் எடுத்துக் கொண்ட முயற்சி தோற்றதால் அவையை அவர் ஒரு மணி நேரம் ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

இதேபோன்று மாநிலங்கள் அவையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். நேற்று சபை ஆரம்பமாகியதும் நடிகை ஜெயா பச்சன், வெங்கையா நாயுடு, உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல், தொழிலதிபர் அனில் அம்பானி உட்பட 51 பேர் பதவியேற்றனர். இதன் பிறகு பா.ஜ.கவினர் தங்களது கோஷத்தை தொடங்கினார்கள். முதலில் கறைபடிந்த அமைச்சர்கள் குறித்த விரைத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவதாக அக்கட்சியின் மூத்த தலைவர் அலுவாலியா இப்பிரச்சினையைத் தொடக்கி வைத்தார். இதையடுத்து அவர் பேசி முடிப்பதற்குள் மாநிலங்கள் அவையின் தலைவர் பைரோன்சிங் காவத் அவையை நேற்று முழுவதும் ஒத்திவைப்பதாக அறிவித்தார். (8)

## நேபாளத்தில் தீவிரவாதிகள் தாக்கியதில் 12 பொலீஸார் கொல்லப்பட்டனர்!

காத்மண்டு,ஜூலை6

தெற்கு நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்கியதில் 12 பொலீஸாரும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டனர்.

தலைநகர் காதமண்டுவுக்கு தெற்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட வர்த்தகர் ஒருவரை மீட்பதற்காக சென்றுகொண்டிருந்த பொலீஸ் வாகனம் தாக்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

தலைநகருக்கருகில் நடந்த இன்னொரு சம்பவத்தில் இரு தீவரவாதிகள் கொல்லப்பட்டனர்.

காத்மண்டுவுக்கு 200 கிலோ மீற்றர் தொலைவில் இந்திய எல்லைக்கருகில் மாவோ தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். உடனடியாக அப்பகுதியைச் சுற்றிவளைத்த பொலீஸார் வீடுகள், கிராமங்கள், காடுகள் எங்கும் சல்லடை போட்டு தேடுதல் நடத்திவருகின்றனர். (ப-8)

## தொழில் நிறுவனங்களின் வேலை ஏற்றுமதியை கடுமையாக எதிர்க்கிறது அமெ. ஜனநாயகக் கட்சி

வாஷிங்ரன்,ஜூலை6

'அவுட்சோர்சிங்' என அழைக்கப்படும் வேலை ஏற்றுமதிக்கு அமெரிக்க ஜனநாயகக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் ஜோன் ஹெரி போட்டியிடுவார் என்பது உறுதி. இந்நிலையில் தொழில் நிறுவனங்கள் தமது வேலைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நிறைவேற்றிக்கொள்வதை எதிர்க்கிறது இக்கட்சி. இதுதொடர்பான வாக்குறுதி, அதன் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் தேசிய பாதுகாப்புக்கொள்கைகளையும் தேர்தல் அறிக்கை குறைகூறுகின்றது.

மக்களுக்கான சுகாதார வசதிகளை விரிவுபடுத்துவது, தொடக்க மற்றும் மேல்நிலைக் கல்விக்கான செலவை அதிகரிப்பது, வேலை ஏற்றுமதியைத் தடுக்கும் விதமாக அத்தகைய நிறுவனங்களுக்கு வரிவிதிப்பது போன்றவை இக்கட்சியின் முக்கிய வாக்குறுதிகளில் சில.

ஈராக் தொடர்பான விவகாரத்தில் உலக நாடுகளின் ஆதரவை திரட்டுவதற்கான வாய்ப்பை புஷ் நிர்வாகம் தொடர்ந்து தவறவிட்டு வருவதாகவும் அக்கட்சி குறைகூறியுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரைத் தனித்து நின்று சாதித்துவிட முடியாது. பிறருடன் சேர்ந்தே அதை சாதிக்க முடியும் எனவே, கூட்டணியை மாற்றி அமைக்க புது முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தேர்தல் வரைவு அறிக்கை தெரிவிக்கிறது. (8)

## அமைதியை வலியுறுத்தி சைக்கிளில் உலகத்தைச் சுற்றும் வாலிபர்கள்

புதுடில்லி,ஜூலை6

உலகில் அமைதி நிலவவேண்டும் என்ற இலட்சியத்தை வலியுறுத்தி, உலகைச் சைக்கிளில் சுற்றிவரத் தொடங்கியுள்ளனர் பங்களாதேஷ் இளைஞர் இருவர்.

அவர்கள் பத்து ஆண்டுகளில் 178 நாடுகளுக்குச் சென்று உலக அமைதியின் முக்கியத்துவத்தைப் பிரசாரம் செய்வார்கள்.

பங்களாதேஷைச் சேர்ந்த இளைஞர்கள் கமல்குமார் கா, கமல் ஹூசைன் ஆகிய இருவரும் இந்த இலட்சியத்துக்காக சைக்கிள் பயணத்தைத் தொடங்கி புதுடில்லி வந்துசேர்ந்துள்ளனர்.

அவர்கள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர்.

டில்லியில் கமல்குமார் கா நிருபர்களிடம் கூறியதாவது:-

இதுவரை 9 நாடுகளுக்குச் சென்றுவிட்டோம். தினசரி 120 கிலோமீற்றர்கள் சைக்கிளில் சென்றால் பத்து ஆண்டுகளில் உலகைச் சுற்றிவர முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

எங்கள் பயணத்துக்கு போதிய நிதி வசதி இல்லை. ஆனால், அதை சமாளிப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. இதுவரை பாகிஸ்தான், அஜர்பைஜான், நேபாளம், இலங்கை, சீனா, இந்தியா ஆகிய நாடுகளில் பயணஞ்செய்து அங்குள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் மக்களைச் சந்தித்து உலக அமைதியின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளோம் - என்றார். (8)

## உலக வர்த்தக மையம் இருந்த இடத்தில் 'சுதந்திர கோபுரம்' கட்டுவதற்கு அடிக்கல்

நியூயோர்க்,ஜூலை6


நியூயோர்க்கில் தீவிரவாதிகள் விமானங்களை மோதித் தகர்த்த உலக வர்த்தக மையக் கட்டடங்கள் இருந்த இடத்தில் 'சுதந்திர கோபுரம்' எனப்படும் உலகின் மிக உயரமான கட்டடம் கட்டுவதற்கு நேற்றுமுன தினம் அடிக்கல் நாட்டப்பட்டது. பூமி பூஜையும் நடத்தப்பட்டது.

நியூயோர்கில் உலக வர்த்தக மையக் கட்டடம் இருந்த இரட்டைக் கோபுரத்தின் மீது கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அல்கெய்டா தீவிரவாதிகள் விமானத்தைக் கடத்திச் சென்று மோதி பயங்கரத் தாக்குதல் நடத்தினர். இதில் 2 ஆயிரத்து 700 இற்கும் அதிகமானோர் பலியானார்கள். அந்த இடத்தில் இப்போது 541 மீற்றர் உயரத்தில் உலகிலேயே மிக உயரமான கட்டடம் கட்டப்படுகின்றது. இதற்கென 20 தொன் எடையுள்ள கிரானைட் சிலாப் ஒன்று கடந்த வியாழக்கிழமை கொண்டுவரப்பட்டது.

அமெரிக்க சுதந்திர தினமான நேற்று முன்தினம் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் பூமி பூஜை நடைபெற்றது. அடிக்கல் நாட்டு விழாவில் நியூயோர்க் ஆளுநர் ஜோர்ஜ் படாகி. நகர மேயர் மைக்கேல் ப்ளூபர்க் மற்றும் நகரின் முக்கிய தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

'சுதந்திர கோபுரம்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த உயரமான கட்டடம் 1.5 மில்லியன் டொலர் செலவில் கட்டப்படவுள்ளது. 2009ஆம் ஆண்டு இநதக் கட்டடப் பணி முடிவடையும். இக்கட்டடம் கட்டி முடிக்கப்படும் போது, தற்போது கோலாலம்பூரில் உள்ள 432 மீற்றர் உயரமுள்ள பெட்ரோனாஸ் ரவர் மற்றும் தைபேயில் உள்ள 508 மீற்றர் உயரமுள்ள கட்டடம் ஆகியவற்றைக் காட்டிலும் உயரமானதாக அமையும்.

கட்டப்படவுள்ள சுதந்திர கோபுரத்தின் மாதிரித் தோற்றம



மேலும், தீவிரவாத தாக்குதலின்போது 2 ஆயிரத்து 700 பேர் பலியான சம்பவத்தைக் குறிக்கும் விதததில் இக்கட்டடத்தில் நிரந்தர நினைவிடம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (8)

## சதாம் ஹுசைனின் வழக்கறிஞருடன் ஈராக் நீதிபதி தொலைபேசியில் பேச்சு

அம்மான்,ஜூலை6

முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்துவரும் ஈராக் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சலீம் சலாபி, சதாமின் வழக்கறிஞருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். இத்தகவலை சதாமின் வழக்கறிஞரான ஜோர் தான் வழக்கறிஞர் முகம்மது அல் ரஷ்தான் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

சதாம் மீதான வழக்கில் அவர் சார்பாக ஈராக்கைச் சேர்ந்த வழக்கறிஞரே ஆஜராகமுடியும். இதுதான் சட்டப்படியானது என்று தன்னிடம் சலாபி தெரிவித்ததாக ரஷ்தான் குறிப்பிட்டார்.

ஈராக்கைச் சேர்ந்த வழக்கறிஞரையே இந்த வழக்கில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ரஷ்தான் தெரிவித்தார்.

இதனிடையே, ஈராக் செல்ல ரஷ்தானின் குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனுமதிகேட்டு ஈராக் மற்றும் அமெரிக்க இராணுவ அதிகாரிகளுக்கு ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளார் ரஷ்தான். (8)

# மனிதத்துவத்தின் தோற்றமாக விளங்கியவர் பேராசிரியர் துரைராஜா

## மொறட்டுவ பல்கலை துணைவேந்தர் புகழாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

இனம், சாதி, நிறம் அல்லது மதம் போன்ற பாகுபாடுகளின்றி சகல மனிதருக்குமே பேராசிரியர் துரைராஜா மனிதத்துவத்தின் ஒரு தோற்றமாகவே காட்சியளித்தார்.

- இவ்வாறு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் அறிவுவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் தயானந்த எஸ்.விஜயசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் கடந்த சனிக்கிழமை மாமனிதர் பேராசிரியர் ஆ.துரைராஜாவின் நினைவுப் பேருரையை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு புகழ்ந்துரைத்தார்.

"பொறியியல் கல்வியின் தேவை" என்ற தலைப்பில் நினைவுரை நிகழ்த்திய பேராசிரியர் தயானந்த, அமரர் பேராசிரியர் துரைராஜா பற்றி மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நினைவுரையை நிகழ்த்தக் கிடைத்திருப்பதைப் பெரும பேறாகக் கருதுகின்றேன். அதேசமயம் இந்தப் பேருரை நிகழ்த்தும்படி அழைக்கப்படும் அளவுக்கு எனக்குத் தகுதியில்லையோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தபோது சிவில் பொறியியல்துறை பேராசிரியராகவும் பின்னர் பொறியியல்துறை பீடாதிபதியாகவும் அமரர் துரைராஜா உயர்வுபெற்றார். பெரும்பாலும் அந்த காலகட்டத்தில்தான் இன்று இலங்கையில் மூத்த பொறியியலாளர்களாக இருப்பவர்களும் வெளிநாட்டில் இருக்கும் - எனது இளைய சகோதரன் உட்படப்பலரும் - அவரிடம் பொறியியல் துறையில் பயிற்சிபெற்றிருந்தார்கள். நான் வெளிநாட்டில் உயர்கல்வியைப் பெற்றதால் அவரிடம் கற்கும அதிர்ஷ்டத்தைப் பெற முடியவில்லை. ஆனால், அவரும நானும திறந்த பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் பணிபுரிந்த காலததில் பொறியியல் கல்வியை எவ்வாறு பயிற்றுவிப்பது என்பதை கற்றுக்கொள்ளும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொண்டேன். அந்தப பல்கலைக்கழகம் அவர் காலஞ்சென்ற பின்னர் அவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

பேராசிரியர் துரைராஜா காலமான பின்னர் ஆறுநாள் கழித்து 1994 ஜூன் 17ஆம் திகதி நடந்த பட்டமளிப்பு விழாவில் அவருக்கு விஞ்ஞான கலாநிதிப் பட்டத்தை வழங்கியது. அவ்வேளையில் நான் வெளியிட்ட அவர் பற்றிய நினைவுக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்.

பேராசிரியர் துரைராஜா எல்லா மனிதர்களுக்கும் எல்லா விதமாகவும் தோற்றமளித்தார். பொறியியல்துறையில் அவர் மிகச் சிறந்த பொறியியலாளர், மாணவர் சமுதாயத்திற்கு மிகச் சிறந்த ஆசிரியர், புவியியல் தொழில்நுட்பவியல் விஞ்ஞானிகளுக்கு வழிகாட்டிய தலைவர். அவர் உலகின் மிகச் சிறந்த ஆயவாளர்களுடன் தம்துறையில் பணிபுரிந்துள்ளார். அவர்களுக்கு சமமானவராக சில சமயம் அவர்களைவிட சிரேஷ்டராகவும் அவர் விளங்கினார்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் (UTHR) நிறுவனத்தின் ஸ்தாபக உபதலைவராக அவர் விளங்கினாா. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களும் ஆசிரியர்களும் உடல் ரீதியில் எல்லாத்தரப்புகளாலும் தாக்குதல்களுக்குள்ளாவதிலிருந்து பாதுகாப்பதில் அவர் தமது நேரத்தின் பெரும பகுதியைச் செலவிட்டார்.

அவர் தனது மரணத்தின் மூலம்கூடப் பல படிப்பினைகளைக் காட்டியுள்ளார். யுத்தத்தின் அர்த்தமற்ற, அவசியமற்ற தன்மை கிடைத்திருக்கும் ஒரு கொஞ்ச வளத்தைக்கூடப் பயன்படுத்திக்கொள்ள முடியாதநிலையிலுள்ள எமது அநீதிமிக்க சுகாதார அமைப்பு, அவைகளை எதிர்த்து எவ்வாறு போராடுவது மற்றும் துணிச்சலோடும் மற்றவர்களுக்கு குரோதமற்ற முறையிலும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் இவை அனைத்தையும் முக்கியமாக புன்னகையோடு எவ்வாறு எதிர்கொள்ளுவது என்பதை அவர் காட்டிச்சென்றுள்ளார்.

[illegible]யும், பாரம்பரியமிக்க பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்தபோதிலும், தனது பட்டபின் படிப்பை இன்னொரு பாரம்பரிய பல்கலைக்கழகமான கேம்பிறிட்ஜில் பெற்றிருந்த போதிலும், இன்றைய காலகட்டத்துக்கு ஏற்ற கல்வியை நமது நாட்டுக்கு ஏற்றமுறையில் முன்னெடுக்க வேண்டும் என்பதிலும், அதேவேளை - கல்வியின் தரத்தைப் பேணிக்கொள்வதிலும் பெரிதும் ஊக்கம் உடையவராகவும் ஆர்வமும் தீர்க்க சிந்தையும் கொண்டவராகவும் இவர் திகழ்ந்தார் -என்றார் அவர்

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஸ்ணஐயர் ஆகியோர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உட்பட பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாணவர்கள் எனக் கணிசமான எண்ணிக்கையினர் உரையைக் கேட்க வந்திருந்தனர்.

துணைவேந்தர் விஜயசேகராவின உரைமுடிவுற்ற பின்னர், அவருக்கு தேநீர் விருந்துபசாரம் வழங்கப்பட்டது. அதில் வேந்தர், துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் கலந்து கொண்டனர். (ப-எ-12)






514ஆவது பிரிகேட் ஒழுங்கு செய்த கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 9ஆவது சிங்க றெஜிமென்ட் அணியும் 10ஆவது நஷனல் காட் அணியும் மோதுவதை முதலாவது படத்திலும் -

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி சுசில் சந்திரபால உட்படக் கலந்துகொண்ட சிறப்புவிருந்தினர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.


சிவமயம்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

எரிபொருள் நிரப்பு நிலையம்

மங்களகரமான திறப்பு விழா

நாளை (07-07-2004) புதன்கிழமை

இடம்: காங்கேசன்சாலை, உடுவில்

காலம்: பி.ப.3.00மணி

தலைமை: திரு.சி.குமாரவேல் அவர்கள்

தலைவர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- நாடா வெட்டி திறந்துவைத்தல்
- முதன்மை விருந்தினர்கள்

திரு.மாவை சேனாதிராஜா அவர்கள்
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)
திரு.சி.இளம்பரிதி அவர்கள்
(பொறுப்பாளர், அரசியல்துறை, யாழ். மாவட்டம்)
திரு.கி.விஜிதரன் அவர்கள்
(பொறுப்பாளர், நிர்வாகசேவை, யாழ். மாவட்டம்)
திரு.இ.இளங்கோவன் அவர்கள்
(கூட்டுறவு ஆணையாளரும் - பதிவாளரும், வடக்கு - கிழக்கு மாகாணம்)

சிறப்பு விருந்தினர்கள்

திரு.பொ.புஸ்பகுமார் அவர்கள்
(பொறுப்பாளர், கூட்டுறவுப் பகுதி, யாழ். மாவட்டம்)
திரு.செ.கனகசபாபதி அவர்கள்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ். மாவட்டம்)
திரு.எஸ்.ஜெயப்பிரகாசம் அவர்கள்
(உதவிப் பிரதேச செயலர், வலி.தெற்கு, உடுவில்)
திரு.வீ.சண்முகநாதன் அவர்கள்
(பிராந்திய முகாமையாளர், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வடபகுதி)
திரு.மா.சந்திரகாந்தன் அவர்கள்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்)
திரு.பெ.கனகசபாபதி அவர்கள்
(தலைவர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை)
திரு.ப.கனகலிங்கம் அவர்கள்
(தலைவர், யாழ். மா.வி.நு.கூ.சங்க சமாசம் வ-து)

- அமைதி வணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- முதன்மை விருந்தினர்கள் உரை
- சிறப்பு விருந்தினர்கள் உரை
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்.

விளம்பர அன்பளிப்பு:
ச.வி.முருகேசு
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-36221) (26-16-18)


# சத்துணவு வழங்குவது குறித்து பயிற்சிப் பட்டறைகளுக்கு ஏற்பாடு

தென்மராட்சி,ஜூலை6

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உலகவங்கியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் கல்விக்கான

## கருத்தரங்கு

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தரவு சேகரிப்புத் தொடர்பான கருத்தரங்கு இன்று முற்பகல் 11 மணிக்கும் பிற்பகல் 12.30 மணிக்கும் யாழ். கல்வி வலயத்தில் இடமபெறவுள்ளது.

மேற்படி கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களை இக்கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளர் ஜி.சிவபாலன் கேட்டுள்ளார். (எ-ரி)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலை மற்றும் கழகங்களுக்கிடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளை மாவட்ட மட்டத்தில் நடத்தவுள்ளதுபாடசாலை மட்டததில் ஆண்கள் பிரிவில் 17 மற்றும் 19 வயதுப் பிரிவினருக்கும், பெண்கள் பிரிவில் 19 வயதுப் பிரிவினருக்கும் -

கழக மட்டத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் இப்போட்டிக்ள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் பாடசாலை மற்றும் கழக மட்ட அணிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பாக சூ.அகிலன், செயலாளர், கூடைப் பந்தாட்டச் சங்கம், லண்டன் மொழிப் பாடசாலை, இல.114, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (10-5)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4மணிககு யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து யங் ஹென்ரீசியன் விளையாட்டுக் கழகமும் மாலை 5மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (10-ரி)

உணவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் சத்துணவுகள் வழங்குவது தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் எதிர்வரும் 8ஆம், 9ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் பல்வேறு நிலையங்களில் நடைபெறவுள்ளன.

பயிற்சிப் பட்டறைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்திலும் 15 ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் 16 ஆம் திகதி வரணி மகா வித்தியாலயத்திலும் நடத்தப்படும்.

இப்பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்ள பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கள், அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், அந்தந்தப் பகுதி பல நோக்குக் கூட்டுற வுச சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த 55 பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம 9 வரை கற்கும் 11 ஆயிரத்து 885 மாணவர்கள் பயனடைவர் என கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் தெரிவித்தார்..

மருதங்கேணி, ஊர்காவற்றுறை ஆகிய கல்விக்கோட்டங்களில் சத்துணவு பயிற்சிப் பட்டறைகள் கடந்தமாதம் நடத்தப்பட்டமை குறிபபிடத்தக்கது. (எ-117)


DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=

BHARATHI PATHIPPAKAM
OFF - SET PRINTERS
430, K.K.S. Road, Jaffna.
Telephone: 021 222 3081.

(சி-36218)


# துயர் பகிர்கின்றோம்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்தவரும் - தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச செயலக வேலணை தென்கிழக்கு J/15 கிராம அலுவலர் திரு.சி.இ.கா.சிவஞானம் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி கார்த்திகேசு சௌந்தரம்மா**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தவருடன் இணைந்து எமது துயர்தனைப் பகிர்ந்துகொள்வதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தீவுப்பகுதி தெற்கு, வேலணை.

(சி-36223) (34-16-18-26)

உதயன்

## கெடுவான் கேடு நினைப்பான்

நாட்டில் ஒரு யுத்த நிறுத்தம் பெயரளவில்தான் முன்னெடுக்கப்படுகின்றது. கிழக்கிலங்கையில் முகம் தெரியாத எதிரியுடன் இருண்ட யுத்தம் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதை இதேபத்தியில் சில தினங்களுக்கு முன்னர் சுட்டிக்காட்டியிருந்தோம்.

கிழக்கில் நேற்று நடந்த சம்பவங்கள் நாம் சுட்டிக்காட்டிய நிலைமையின் விபரீதத்தை மேலும் ருசுப்படுத்தியிருக்கின்றன. மீளத்திரும்பமுடியாத - மீளத்திருத்தியமைக்கமுடியாத - மோசமான - ஆபத்தான - நிலைமையை நோக்கி விவகாரம் நகர்ந்துகொண்டிருப்பதற்கு இந்நிகழ்வுகள் கட்டியம் கூறுகின்றன என்றே கருத வேண்டியுள்ளது.

1994-95 இல் இதேபோன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசுடன் சமாதானப்பேச்சு நடத்திய காலத்திலும் ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசு குறித்துப் புலிகள் குறைகூறி வந்தனர். ஒருபுறம் சமாதானம் பேசிக்கொண்டு மறுபுறம் யாழ். குடாநாட்டைச் சுற்றி வளைத்து, கபளீகரம் செய்து, கைப்பற்றுவதற்கு அரசுப் படைகள் தயாராகி வருகின்றன என்று அந்தச் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற காலத்திலேயே புலிகள் குற்றம் சுமத்தி வந்தனர். அவர்கள் கூறியது போலவே விவகாரம் பின்னர் நடந்தேறியது.

அந்தச் சமாதானப் பேச்சுகள் முறிவடைந்து ஆறு மாதங்களுக்குள்ளேயே குடாநாட்டைக் கைப்பற்றின அரசுப் படைகள்.

இதற்கு முன்னர் 1994-95 இல் சமாதானப் பேச்சுகள் இடம்பெற்ற சமயம் ஜனாதிபதி சந்திரிகா அரசின் கண் - இலக்கு - வடக்கில் இருந்தது. இம்முறை அது கிழக்குக்குத் திரும்பியிருக்கின்றது என்ற சந்தேகத்தையே அங்கு இடம்பெறும் சம்பவங்கள் உருவாக்கியிருக்கின்றன.

யுத்தநிறுத்த காலத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே பரஸ்பரம் நம்பிக்கையை கட்டிவளர்ப்பது அவசியம் என்று யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முன்னுரை கூறுகின்றது. ஆனால், அதற்குப் பதிலாக நம்பிக்கையைக் கெடுக்கும் படுகொலைகளும் வன்முறைகளும் தான் கிழக்கில் அரங்கேறி வருகின்றன.

கிழக்குச் சம்பவங்கள் தொடர்பாக அரசும் இராணுவமும் என்ன சாக்குப் போக்கும், விளக்கம் - வியாக்கியானங்களும் கூறினாலும் இவற்றுக்கெல்லாம் யார் பின்னணி என்பது வெள்ளிடைமலை.

"கருணா கும்பலைப் பயன்படுத்தி இராணுவமே இச் சம்பவங்களை வழிப்படுத்தி நடத்தி வருகின்றது என்பதை ஐயம்திரிபற உறுதிசெய்திருக்கின்றோம்" - என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவுபடக் கூறியிருக்கின்றார். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஊடாக ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இதனை நேரிடையாகவே அவர் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

அதுமட்டுமல்ல. "கருணாவை இவ்வாறு இராணுவம் பாதுகாத்துக்கொண்டு - பயன்படுத்திக்கொண்டு - இருக்கும் வரை அரசுத் தரப்பினர் இந்தச் சமாதான முன்னெடுப்புகளில் நம்பகத் தன்மையோடு நடப்பவர்கள் மாதிரி இல்லை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். இதனை சமாதான முயற்சிகளில் பாரிய நெருக்கடியாகவே கருதுகிறோம்." - என்றும் சில தினங்களுக்கு முன்னர் அவர் கூறியிருந்தார்.

இப்போது நிலைமை மேலும் நெருக்கடிக்குள் மூழ்கிப் போயிருக்கின்றது.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதையே இந்தச் சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன.

யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தி யுத்தத்துக்கான தயாரிப்பை வெளிப்படையாகச் செய்யும் நடவடிக்கையாகவே இந்தச் சம்வங்களை நோக்க வேண்டியிருக்கின்றது.

கருணாவுக்கு அரச இராணுவம் அடைக்கலம் கொடுக்கிறது. கருணாவோடு தாம் தொடர்புகள் வைத்திருப்பதை அரசின் அமைச்சர் ஒருவரே பகிரங்கமாக ஒப்புக்கொள்கின்றார். கருணா குழுவோ எஞ்சியிருக்கும் சிலரை வைத்துக்கொண்டு - சீருடையினர் உதவியோடு - வன்முறைகளையும், கொலைகளையும், அடாவடித்தனங்களையும் புரிந்து கொண்டிருக்கின்றது.

இது, யுத்த நிறுத்தம் பேணும் தரப்பை வலிந்து யுத்தத்துக்கு இழுக்கும் செயலன்றி வேறில்லை. அவர்களுக்கு ஆத்திரமூட்டும் பணியை அரசு இப்போது கச்சிதமாகச் செய்துகொண்டிருக்கிறது என்பதனைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஆனால் இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் நாம் குறிப்பிட்டது போல புலிகள் முள்ளை முள்ளால் எடுப்பவர்கள்.

இவ்விடயங்களில் பாதிக்கப்பட்டிருக்கும் புலிகள் அதே பாணியைத் திரும்பக் கைக்கொள்ளப் புறப்பட்டால் நிலைமை என்னவாகும்?

பொறுப்புள்ளவர்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய விடயம் இது. அதுவும் நிலைமை விபரீதமாகும் முன்னர் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குதிரை ஓடிய பின்னர், லாயத்தை மூட முயற்சிக்கும் கதையாக விடயம் மாறிவிடும்.

அதனால் ஏற்படும் பேரிழப்பை முழு நாடுமே எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை அவர்கள் உணர்வதும் நல்லது.

# விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள படை முகாமுக்கு அறிவியுங்கள்!

### போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரி சாரதிகளிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை6

வீதி விபத்துக்கள் ஏற்படும் போது அதுகுறித்து உடனடியாக அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு அல்லது பொலீஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தினால் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை பொதுமக்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ்.போக்குவரத்துப் பொலீஸ் பொறுப்பதிகாரி சேனநாயக்க.

நேற்றுமுன்தினம் யாழ்மத்திய கல்லூரியில் தனியார் மினிபஸ் சாரதிகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று போக்குவரதுப் பொலீஸாரால் நடத்தப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களின் போது ஏதாவது உயிரிழப்புக்கள், சேதங்கள் ஏற்பட்டால் பொதுமக்கள் ஆத்திரமடைந்து சம்பந்தப்பட்ட வாகனச சாரதியைத் தாக்கியும் வாகனத்தை எரித்தும் நாசமாககி வருகின்றனர்.

இதனால், வாகன உரிமையாளர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகின்றது.

குடாநாட்டில் எங்கேயாவது விபத்து ஒன்று ஏற்பட்டால் வாகனத்தை அந்த இடத்தில் நிறுத்தி சம்பவம் நடைபெற்ற இடத்தை அடையாளப்படுத்தி விட்டு உடனடியாக அருகிலுள்ள இராணுவ முகாம, காவலரண் அல்லது பொலீஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்துங்கள்.

இராணுவத்தினா வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்குத் தயாராக உள்ளனர்.

இதேவேளை விபத்தில் காயமடைந்தவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லவேண்டும்.

பாதைக் குறியீடுகளில் கவனம் செலுத்தி அந்த நடைமுறையினைக் கடைப்பிடிக்கவேண்டும்.

வீதி ஒழுங்கு முறைச் சட்டத்திற்கு மாறாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் சட்டத்தின் முன் குற்றவாளிகள் பொலீஸாரே.

மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு அதிக எண்ணிக்கையான பிரயாணிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லக்கூடாது.

புகைகக்கும் வாகனங்களையும் வீதிகளில் செலுத்தக்கூடாது என்று தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் சுமார் 50இற்கு மேற்பட்ட மினிபஸ சாரதிகள் மற்றும் மினிபஸ் சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-7)

# சமாதானம் என்று கூறிக்கொண்டு யுத்தத்துக்குத் தயாராகின்றது அரசு

### புதிய ஜனநாயகக் கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஜூலை6

சமாதானம் என்று கூறிக்கொண்டு படைகளைப் பலப்படுத்தி ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொண்டு யுத்தத்தயார்படுத்தல் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டிருக்கின்றது.

இது எமது மக்கள் மத்தியில் கவலையையும் - அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இவ்வாறு குறிப்பிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது புதிய ஜனநாயகக் காட்சி

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக அந்தக் கட்சி வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் சமாதானப் பேச்சை முன்னெடுப்பதா? அல்லது யுத்தத்திற்குச் செல்வதா? அன்றி முன்னைய அரசு போன்று யுத்தமும் இல்லை சமாதானமும் இல்லை என்றவாறு காலத்தைக்கடததிச் செல்லும் தந்திரோபாயத்தை கைக்கொள்வதா என்பதில் முடிவெடுகக முடியாத தயக்கமும் தடுமாற்றமும் கொண்ட நிலையிலேயே இருந்து வருகின்றது. இத்தகைய நிலை இறுதியில் யுத்தம் என்ற அபாயக் கட்டத்திற்கே வழிவகுக்கக் கூடியதாகும்.

எனவே, கடந்த கால அனுபவங்களையும், பட்டறிவுகளையும் கவனத்தில் கொண்டு அரசியல் குறுக்கு வழிகளையோ அல்லது யுத்தத் தயாரிப்புக்களையோ நாடிச்செல்லாது புலிகள் இயக்கத்துடனான பேச்சுக்களை விரைந்து ஆரம்பிப்பதற்கு ஆக்கபூர்வமான வழிகளில் ஜனாதிபதியும், அரசும் செயற்படவேண்டும்.

அதேவேளை இன்றைய சூழலைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்து நிற்கும் அமெரிக்க, இந்திய மேலாதிக்க சகதிகளின் உளநோக்கங்களுக்கு பலியாகாதவாறு சம்பந்தப்பட்ட சகல தரபபினருடனும் தத்தமது அரசியல்,விவேகத்தை தூரநோக்குடன் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் புலிகள் இயக்கத்துடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாகக் கூறி, நோர்வே அனுசரணைக்கு அழைப்புவிடுத்து இரண்டரை மாதங்கள் ஆகின்றன. நோர்வேத்தரப்பினரும் வன்னிக்குச் சென்று திரும்பியதுடன் ஜனாதிபதி, பிரதமருடன் பேசியும் உள்ளனர். ஆனால் தெளிவான, உறுதியான சமிக்ஞைகள் இதுவரைத் தென்படவில்லை.

அரசின் பிரதான பங்காளியான ஜே.வி.பி.தனது எதிர் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிப்படையாக இப்போது பேசுவதில்லை. ஆனால், அவர் அமெரிக்காவின் ஆலோசனைகளைப் பெறுவதிலும் இந்திய அரவணைப்பை நாடுவதிலும் உள்ளார்ந்த செயற்பாட்டைக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் ஜனாதிபதியும் அரசும் பேச்சு, சமாதானம் பற்றிப் பேசிவரும் அதேவேளை யுத்தத் தயாரிப்பிலும் படைகளைத் தயார்ப்படுத்துவதிலும் வேகம் காட்டி வருகின்றனர்.

இது அனைத்து மக்கள் மத்தியில் அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தி வருகின்றது. எனவே ஜனாதிபதியும், அரசும காலத்தை இழுத்தடித்துச் செல்லாது புலிகள் இயக்கத்துடன் பேச்சை ஆரம்பிப்பதும் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் வழிவகைகளைத் தீர்வாகக் கொள்வதும் இன்றைய தேவை என்பதை எமது புதிய ஜனநாயகக்கட்சி வற்புறுத்துகின்றது.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சுற்றுலாப் பயணிகளால் நிறைகிறது யாழ்.நகரம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ்.நகரப் பகுதி சுற்றுலாப்பயணிகளாலும், வெளிநாடுகளில் இருந்து விடுமுறையில் வந்தவர்களாலும் நிரம்பி வழிகிறது. இதனால், கடந்த சில நாள்களாக நகரில் சன நெருக்கடி ஏற்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது.

- நயினாதீவு அம்மன் ஆலய பெருந்திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பெருமளவான மக்கள் வெளியிடங்களிலிருந்து வநதிருந்தனர். யாழ். நகரில் உள்ள சுற்றுலா விடுதிகளும் இடவசதி போதாத நிலையில் நிரம்பி வழிகின்றன.

இச்சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு இடமின்றி அலையும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேலைத்தேய நாடுகளில் விடுமுறைக்காலமாகையால், அங்கு வேலைதேடி குடும்பமாகச் சென்ற யாழ்.குடாநாட்டு மக்களும் குடும்பம் குடும்பமாக வெளிநாடுகளில் இருந்து குடாநாட்டுக்கு விடுமுறையில் வரத் தொடங்கியிருக்கின்றனர்.

குடாநாட்டின் பல பாகங்களிலும் வந்து சேர்ந்துள்ள இவர்களும் தினமும் யாழ். நகரை வலம் வந்து கொண்டிருப்பதால் வாகன நெருக்கடிகளும், சன நெருக்கடிகளும் அதிகரித்துக் கொண்டுள்ளது. (4-15)

# பிறிமாவுடன் அரசு செய்த ஒப்பந்தம் பற்றி வர்த்தக அமைச்சருக்கு ஒன்றும் தெரியாதாம்

### மா இறக்குமதி ஏகபோகத்தை உடைக்க பெர்னாண்டோபுள்ளே உறுதி

கொழும்பு,ஜூலை6

கோதுமை மாவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய விரும்பும எவரும் தடங்கலின்றி அவ்வாறு செய்வதற்கு இடமளிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறப்போவதாக வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்களுக்கான அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே அறிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சரவையில் பத்திரமொன்றை அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பறிமா நிறுவனத்துடன் இலங்கை அரசு தனக்குத் தெரியாமல் எந்தவித ஒப்பந்தங்களைசெய்து கொண்டிருந்தாலும் அந்த நிறுவனத்துக்கு விட்டுக் கொடுக் கப் போவதில்லையெனறும், பேரம் பேசப் போவதில்லையென்றும் அமைச்சர் தெரிவித்துளளார்.

முன்னர் வெளிவந்த செய்திகளினபடி அண்மையில் சிங்கப்பூர் பிரதமர் கோசொக் ரொங் இலங்கைக்கு விஜயம் செய்ததையடுத்து இலங்கை அரசு பிறிமா ஸ்தாபனத்துடன் மாவின் விலை தொடர்பாக இணக்கப்பாடொன்றை செய்துகொண்டுள்ளதாகவும் பிறிமாவுடனான வர்த்தகம் வழமை போல் தொடர்ந்து இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தச் செய்தி அமைச்சரைக் குழப்பமடையச் செய்துள்ளது. பிறிமா நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருப்பதாக அரசு தெரிவித்துள்ள அதேநேரம் அப்படியான ஓர் ஒப்பநதம தொடர்பாக தமக்கு ஒன்றுமே தெரியாதென்று அவர் கூறியுளளார்.

உலகச் சந்தையில் மாவின் விலை அதிகரித்து விட்ட நிலையில் தற்போதைய விலையிலேயே தொடர்ந்து பொதுமக்களுக்கு மாவை வழங்க வேண்டுமானால் அரசு 40கோடி 80லட்சம் ரூபா மானியம் தரவேண்டுமென சிங்கப்பூரைச் சேர்ந்த இந்த் பிறிமா நிறுவனம் முன்னர் கோரியிருந்தது. அவ்வேளையில் பிறிமா நிறுவனத்தின் ஏகபோகத்தை உடைக்கும் வகையில் வேறு ஸ்தாபனங்களும் மா இறக்குமதியில் ஈடுபட அனுமதிக்கபட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே எடுத்திருந்தார். ஆனால் இப்போது அரசுக்கும் பிறிமாவுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் பற்றி தமக்கு அறியத்தரப்படவில்லையென்று அமைச்சர் கூறுகின்றார்.

இந்த வகையில் ஏற்கனவே இந்தியா. பாகிஸ்தான், பங்களாதேஷ், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் முதலீடு செய்வது பற்றி விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். (ப)

### நாளை

ஆனி 23
புதன்கிழமை
(07.07.2004)
திதி : பஞ்சமி
முற்பகல் 7.50 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பின்னிரவு 5.33 வரை.
சுபநேரம்: 4.28 - 5.58
ராகுகாலம்: 11.58 - 1.28
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உன்னிடம் இல்லாத ஒரு பொருள் மீது ஆசை கொள்ளாதே. உன்னிடமுள்ள சிறந்த பொருளை எண்ணி மகிழ்ச்சி கொள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இல.132, முதலாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்பு 6 குழி காணி விற்பனைக்குண்டு. (வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி அருகில்) (கடை, வைத்திய நிலையங்கள் கட்டுவதற்கு சிறந்தது) தொடர்பு: வே.அருளானந்தம் (அருள்), 27/5, புது வீதி, கொய்யாத்தோட்டம். (33996)

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். K.சிவராஜா, 'ராஜவாசா' 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021-222-3408, 2574199. (33735)

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 07-07-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. T.P. No. 3529, 2867. (33760)

நேற்றைய உதயனில் நவீன நாடகம் பற்றிய கட்டுரையை வாசித்தீர்களா? அத்தகைய மூன்று நவீன நாடகங்களைக் கொண்ட நூல் அவர் எழுதிய வானொலி நாடகம் எழுதுவது எப்படி?

(33820)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Liteace Van விற்பனைக்குண்டு. தொடர்பு: டாக்டர் K.லோகநாதன், 191, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம். T.P. 5058. (33726)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, பாண்டியன் தாழவுப் பகுதியில் நான்கு பரப்புக்காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.60, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (33772)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் 1½ பரப்புக் காணியில அமைந்த சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.இல. 2312, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (சி-35933)

## இலகு திருமண சேவை

1972, பரணி, படித்த, பிரபல வியாபாரிக்கும் 1972, கேட்டை Lecturer இற்கும் 1974 கேட்டை Canada Engineer இற்கும் படித்த, அழகான பெண்கள் தேவை. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (32057)

## தவறிவிட்டது

வி.ராஜ்மோகனின் கடவுச்சீட்டு (M1924702) 01-07-04 அன்று நயினாதீவிலோ அல்லது 02-07-04 அன்று செல்வச்சந்நிதியிலோ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் G.பாலசுப்பிரமணியம், குருக்கள் வளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே இலக்கம் 021-222-6798. (33824)

நீதிமன்றம் வீதி, மல்லாகம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவஞானம் சதீசன் என்பவரது பாஸ்போட் 28-6-2004 திங்கட்கிழமை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P. 070 212417. (33825)

## கணனி நிலையம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை6

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கணனி நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் க.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் டி.எம்.சுவாமிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான முன்னாள ஐ.நா.நிரந்தர பிரதிநிதி சார்ளி மகேந்திரன், திருமதி சந்திரா மகேந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர். (8-185)

## ஆசிரிய மாணவர் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கினர். (எ-12)

## அன்பளிப்பு

சாவகச்சேரி ஆஸ பத்திரிக்கு இரத்த அழுத்தப் பரிசோதனைக் கருவி ஒன்றை மீசாலை மேற்கைச் சேர்ந்த சி.சற்குணராசா என்பவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். கடந்த வருடமும் ஆஸ்பத்திரிக்கு இரத்தத்தில் சீனி உள்ளதைப் பரிசோதிக்கும் கருவியினையும் அதற்கான தகடுகளையும் இவரால் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (4-117)

## கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் அரும்புகள் உதைபந்து பயிலரங்கம இன்று பிற்பகல் 3மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது.

மேற்படி பயிலரங்கத்தில் பயிற்சியினூடே உயர்ச்சி பெறுவோம் என்ற இலக்குடன் 6 தொடக்கம் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான இரண்டு வருடங்களைக்கொண்ட செயற்பாடுகள் இடம்பெறும்.

நிகழ்வில் ஆங்கிலம் கற்றல், வலுவூட்டல், (கராத்தே), கணனி போன்ற மேலதிக பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளதென அ.அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார். (10-190)

## ஆள் தேவை

☆ ரீ மேக்கா ☆ சப்ளையர்

தகுதியானோர் உடன் நேரில் வரவும்

**கிஷாந் கபே,**

பழைய ஸ்ரேஷனடி,

ஆடியபாதம் வீதி, கொக்குவில். (33827)

## பதவி வெற்றிடம்

# கணனிப் போதனாசிரியர்

வடமராட்சி கிழக்கு வளம்பேணும் சங்கத்தினால் தென் இந்திய திருச்சபை மண்டபத்தில் நடத்தப்படும் கணனி நிலையத்தில் மேற்படி வெற்றிடத்திற்கு ஆள் தேவை.

கணனித்துறையில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பதுடன், குறைந்தது ஒருவருடத் துறைசார் அனுபவம் உடையவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 'தலைவர், வடமராட்சி கிழக்கு, வளம்பேணும் சங்கம், குடத்தனை என்ற முகவரிக்கு 15.07.2004 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய்தாக அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்

வடமராட்சி கிழக்கு வளம் பேணும் சங்கம்,

(சி-36220) குடத்தனை

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18 - 06 - 1922



ஆண்டவன் அடியில் 18 - 06 - 2003

திருமதி

## இராசையா கனகம்மா

**அன்பு மொழி பேசி ஆதரவாய் எமை அரவணைத்து**
**துன்பமென்ற சொல்லே தெரியாமலெமை வளர்த்து ஆழாக்கி**
**இன்ப வாழ்வு நாம் வாழ தன்னையே அர்ப்பணித்த அன்னையே!**
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

இ.லிங்கேஸ்வரன் (மகன்).

இராஜவீதி,
தோப்பு, அச்சுவேலி.

(33823)(43-21-11-18)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி சு.பரமலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலக ஆளணியினர், மாணவர்கள்.

(33816)(26-18-11-21)

# மரண அறிவித்தல்

## அப்பாப்பிள்ளை திருநாவுக்கரசு



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்துவந்தவருமாகிய அப்பாப்பிள்ளை திருநாவுக்கரசு 04.07.2004 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - பொன்னம்மாவின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் குகதாஸ (கனடா), இராசபவானி, புஸ்பராணி (கனடா), சிவதாஸ் (வவுனியா), மோகனதாஸ் (கனடா), கமலராணி, விஜியதாஸ் (கனடா), முருகதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் இன்பரதி (கனடா), இரத்தினசிங்கம், பாலசிங்கம் (கனடா), அன்புமலர் (வவுனியா), தயாளினி (கனடா), சிவஞானசிங்கம், லட்சரூபி (கனடா), ரூபா (கனடா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற அன்னம்மா தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அனுஷா, விஜிதா, பிரதீபன், துவாரகன், சஞ்சேய், ஜனன், சௌமியா, லோஜனா, சோபிகா, சிந்துஜா, ஆரணி, அபீவன், விதுனா, விபிசாந், விஸ்ணுசாந், அருண், அன்பு, அபினா ஆகியோரின் அன்புப் பேரனும் சபேதாவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-07-2004) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

(சி-36219)(26-11-18-21)

**துணிவகைப் பிறின்டிங்** - பெரிய அளவிலான பெனர்கள், ரை, ரீ-சேட் எம்போசிங் பிறிண்டிங் போன்றவற்றையும், **ஸ்கிறீன் பிறிண்டிங்** - நிறுவனங்களின் விளம்பரப் பெயர்ப் பலகைகள் (பிரபல ஓவியர் கோபால் பட்டாபி அவர்களின் பங்களிப்புடன்), பெரிய அளவிலான சுவரொட்டிகள், ஸ்ரிக்கர்கள், கலண்டர்கள், அழைப்பிதழ்கள், விசிற்றிங் காட் போன்றவற்றையும், **ஒவ்செற் பிறிண்டிங்** - புத்தகங்கள் (பிரபல ஓவியர் இராசையா அவர்களின் ஓவியப் பங்களிப்புடன்), சிட்டைப் புத்தகங்கள், நினைவு மலர்கள் போன்றவற்றையும் மற்றும் **லெற்றப்பிறஸ்** - வேலைகளையும் ஒரே இடத்தில் அழகுற அச்சிட்டுப் பெற்றுக்கொள்வதற்கு

**NOBLE** Printers நோபிள் பிறிண்ரேஸ்

103, Palaly Road, Jaffna. Reg: NAL/DS/625 Mobile: 0777-145399



# யாழ். மாவட்டப் விவசாயச்செய்கையில் தன்னிறைவு பெறவேண்டும்...

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

யாழ்ப்பாண மாவட்டத்தில் காலத்துக்குக் காலம் விவசாயத்துறையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் விவசாயத்தில் முன்னேற்றமோ, வளர்ச்சியோ, தன்னிறைவோ காணப்படவில்லை. அவற்றுக்குப் பல காரணங்கள் கூறப்படலாம். விவசாயிகளுக்கும், அத்துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் அறிவு (Knowledge), செயற்றிறன் (Skill) என்பவற்றினை வளர்க்கக் கூடிய பல தகவல்கள், தொழில் நுட்பப் பயிற்சிகள் என்பவை சமகாலத்தில் வழங்கப்படுவது முக்கியதேவையாகவுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களும் அவை நடைபெறும் இடங்களும் மக்களின் வாழ்க்கைத் தரம், சூழல், சமூகப் பண்புகள், பொருளாதார நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதே சிறந்தது.

யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்தியானது வர்த்தக ரீதியிலான நிலையான அபிவிருத்தியை (Sustainable Development) மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படவேண்டும். அதாவது இம்மாவட்டத்தின் அதிகரித்த உற்பத்தியை நாம் தீர்மானிக்கும் பொழுது அவை வர்த்தக ரீதியிலான நிலையான அபிவிருத்தியாக அமையவேண்டும். விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்தக்கூடியவையாக அவை இருக்கவேண்டும்.

விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அவர்களின் மாத வருமானத்தை அதிகரித்தல், எமது மாவட்டத்துக்குத் தேவைப்படும் உணவுக்குரிய உத்தரவாதத்தை வழங்கல், ஒவ்வொரு அலகு நிலப்பரப்பில் இருந்தும் உச்ச உற்பத்தியைப் பெறுதல், அவ்வுற்பத்தியையும் வளங்களையும் நீடித்து நிலைக்கக் கூடியவாறு பேணல், தூய்மையான, தரமான விதை, நடுகைப் பொருள்கள் மற்றும் உற்பத்திக்கும் தளவிலைக்கும் இடையிலான வேறுபட்ட விலையின் பெரும்பகுதி விவசாயிகளைச் சென்றடைய வைத்தல் என்பவற்றை அடிப்படையாக வைத்து விவசாயத் திட்டங்கள் அமையவேண்டும்.

அத்துடன், வர்த்தக ரீதியிலான விவசாய முயற்சிகளை முன்னெடுக்கும் விவசாயிகளினதும் அத்துறைசார் உத்தியோகத்தர்களினதும் அறிவையும் திறனையும் சமகாலத்தில் விருத்திசெய்தல் என்பவற்றையும் திட்டங்கள் தமது நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும்.

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய செயல்களாக உச்ச உற்பத்தி, தரமான உற்பத்தி என்பவற்றைப் பெறும்நோக்கில் கிடைக்கக்கூடிய சகல மூலவளங்களையும் வினைத்திறனாகப் பயன்படுத்தல் வேண்டும். இவற்றை வளர்க்கக் கூடியதான தொழில்நுட்பங்களை (Appropriate Technology) வழங்கவேண்டும். விவசாயிகளின் முடிவெடுக்கும் திறனை வலுப்படுத்த வேண்டும். அத்துடன், விவசாயம் சார்ந்த கைத்தொழில்களை (AGRO - BASED INDUSTRIES) ஊக்குவித்தல் வேண்டும்.

★ விவசாயிகளின் பிரிவுகளும் அவர்களுக்கு வழங்க வேண்டிய தந்திரோபாயங்களும்.

நமது பிரதேச விவசாயிகளை நாம் மூன்று வகைக்குட்படுத்தலாம். வர்த்தக ரீதியிலான விவசாயிகள் (Commercial Farmers), சராசரி விவசாயிகள் (Average Farmers), அடிமட்ட விவசாயிகள் (Subsistance Farmers)

வர்த்தக ரீதியிலான விவசாயிகள் வருமான உற்பத்திகளை மேற்கொள்பவர்கள். பெரும்பாலும் 10 - 15 சதவீதமானவர்கள் இவ்வகையினர். இவர்களுக்கு அறுவடையின் பின்னான தொழில்நுட்பங்கள் (Post Harvest Technology), தரமான உற்பத்திகளை உற்பத்தி செய்தல் (Quality Products), உற்பத்திகளின் பெறுமதியை அதிகரிக்கக் கூடிய தொழில் நுட்பம் (Value Addition), பொதியிடல் தொழில்நுட்பம் (Packing Technology) ஆகியவை வழங்கப்படவேண்டும். உள்ளீடுகள், மற்றும் மானியமற்ற கடன்களை வழங்கி உலகளாவிய ரீதியிலான கேள்வி - நிரம்பலுக்கேற்ப உற்பத்தியை மேற்கொள்ளத்தூண்ட வேண்டும்.

சராசரி விவசாயிகள் இவர்களை விடச் சற்று வேறுபட்டவர்கள். சுமார் 60 - 70 சதவீதமானவர்கள் இவ்வகையினர். இவர்கள் உள்ளூர் சந்தைகளை மையமாக வைத்து உற்பத்தியை மேற்கொள்பவர்கள் தன்குடும்பத்தின் தேவைகளைவிடச் சற்றுக்கூடுதலாக உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வாழ்பவர்கள். இவர்களை இவர்களது நிலையில் இருந்து உயர்த்தி வர்த்தக ரீதியிலான விவசாயிகளின் தரத்துக்குக் கொண்டுசெல்லவேண்டும்.

அடிமட்ட விவசாயிகள் தான் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியவர்கள். வருடம் முழுவதும் தமக்கு வேண்டிய உணவுப் பொருளகளை உற்பத்திசெய்யும் நிலைக்கு இவர்களின தரம் உயரவேண்டும். ஒருங்கிணைந்த பண்ணை முறை இவர்களுக்கு அறிமுகஞ்செய்யப்பட வேணடும். அத்துடன், சேதனப் பண்ணையில் கிடைக்கக்கூடிய உள்ளூர் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கான முறைகளும் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

இம்மூன்று பிரிவினருக்குமான தேவைகள், பிரச்சினைகள் இடத்துக்கிடம் வேறுபடும். சமூகக்காரணிகள், சூழல் போன்றன இவர்களின் தேவைகளைத் தீர்மானிக்கின்றன. உதாரணமாக வலிகாமத்திலும் வடமராட்சியிலும் உள்ள வர்த்தக ரீதியிலான விவசாயிகளை எடுத்துக் கொண்டால், இரு இடங்களிலும் காணப்படும் சூழல், சமூகக் காரணிகள் வேறுபடுவதையும், அவர்களின் பிரச்சினைகளும் தேவைகளும் வித்தியாசமானவையாக இருப்பதையும் அவதானிக்கலாம். இதேபோலத்தான் ஏனைய இரு பிரிவினர்களுக்கும் தேவைகளும் பிரச்சினைகளும் இடத்துக்கிடம் வேறுபடுகின்றன.

ஆகவே, குறிப்பிட்ட மூன்று பிரிவினரது தேவைகள், பிரச்சினைகள் என்பன கிராமத்துககுக் கிராமம் தனித்தனியாக ஆராயப்பட்டுப் பகுப்பாய்வு செய்து அவற்றுக்கேற்ற தந்திரோபாயங்கள் (Strategy) மற்றும் பிரயோசனமான தொழில்நுட்ப (Appropriate Technology) ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும்.

### அபிவிருத்திக்குச் சாத்தியமான திட்டங்கள்

இவற்றை நடைமுறைப்படுத்தப் பின்வரும் திட்டங்களை வகுத்துச் செயற்படலாம்.

★ உற்பத்தித் திட்டங்கள் (Production Programme) விவசாயிகளுக்குப் பயிற்சிகள், தொழில் நுட்பத்தகவல்கள் வழங்கி அவர்களின் அறிவு, செயல்திறன் என்பவற்றை வளர்க்கச் செய்யும் திட்டங்கள்.

★ பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்கள் (Productivity Enhancement Programmes)

ஒவ்வொரு அலகு மண்பரப்பிலும் உள்ள உற்பத்தித்திறன்களை அதிகரிக்கச் செய்யும திட்டங்கள் இதன் உபதிட்டங்களாக மண்ணின் வளத்தை நீண்ட காலம் பேணுதல், ஒருங்கிணைந்த தாவர போஷணை உபயோகம், மண் பரிசோதனை என்பவற்றை மேற்கொள்ளும் திட்டங்கள்.

★ விதை உற்பத்தித்திட்டம் (Seed Production Programmes) தரமான விதை சகலருக்கும் கிடைக்கக் கூடிய முறையில் ஒவ்வொரு விவசாயியும். தமக்கும் தம்பிரதேச மக்களுக்கும் தேவையான விதைகளை உற்பத்தி செய்யும் திட்டம். இதனை விவசாய அமைப்புக்கள் ஊடாக நடைமுறைப்படுத்தலாம். அண்மையில் கந்தளாயில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் விவசாய நிறுவன (Farmer Company) முறையை இங்கும் ஆரம்பிக்கக் கூடியதான திட்டம்.

★ பண்ணை இயந்திரமயமாக்கும் திட்டம் (Farm Mechanization Programme)

எமது சூழல், பொருளாதாரம், சமூகம் என்பவற்றுக்கு இசைவான சிறிய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, விவசாயத்தை இயந்திரமயமாக்கும் திட்டம்.

★ பண்ணைப் பெண்கள் விவசாய விரிவாக்கத் திட்டம் (Farm Womens Agricultural Extension Programme)

விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் திட்டம், தீர்மானம் எடுதல், நடைமுறைப்படுத்தல், இறுதிவிளைவை மதிப்பிடல் போன்ற விடயங்களில் பெண்களின் பங்களிப்பு பற்றாக்குறையாகவே உள்ளது. இதற்காக பண்ணைப் பெண்கள் அமைப்புக்களை உருவாக்கி, அவர்களின் பொருளாதார நிலைகளை சீர்படுத்த வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் போதிய தரமுள்ள உணவுகளை உட்கொள்வதை உறுதிப்படுததவேண்டும். பெண்களின் தகுதி, திறன் என்பவற்றை அதிகரிக்கும் திட்டமாக இது அமையும்.

★ உணவு உத்தரவாதத்திட்டம் (Food Security Programme) எமது மாவட்டத்துக்குத் தேவையான உணவை இயன்றவரையும் பூர்த்தி செய்யும் திட்டம், இதில் மூலவளங்களின் உச்ச அளவு, உற்பத்தி செய்யப்படுவதாக அமையவேண்டும்.

★ ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டம் (Integrated Farming Programme)

ஒருங்கிணைந்த பண்ணைச் சங்கங்களை உருவாக்கி, அவற்றினூடாக விவசாயம், விலங்கு வேளாண்மை என்பவற்றை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

இத்திட்டங்களை வகுத்துச்செயற்படுத்துவதன் மூலம் விவசாய அபிவிருத்தியைப் பெற முடியும். ஆனாலும் இவற்றை நடைமுறைப் படுத்துவதில் சில பிரச்சினைகளும் தடங்கல்களும் காணப்படுகின்றன.

### பிரச்சினைகளும் தடங்கல்களும்

விவசாயத்துறையில் உலகமயமாக்கலுக்கேற்ற நவீன தொழில்நுட்ப அறிவு விவசாயிகளிடமும், அத்துறைசார்ந்த உத்தியோகத்தர்களிடம் பற்றாக்குறையாக இருப்பது முதல் பிரச்சினையாகும்.

நிறைமுனைவன்

திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்கள் அல்லது திணைக்களங்களில் போதிய ஆளணி மற்றும் உட்கட்டமைப்புக்கள் பற்றாக்குறையாக உள்ளன. அரச திணைக்களங்களுக்கு அபிவிருத்திக்குத் தேவையான போதிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை, உற்பத்திகளுக்கான ஸ்திரமான நிலையான சந்தை, அச்சந்தைப்படுத்தலுக்கான துரிதமான இலகு போக்குவரத்து முறைகள் இல்லாதிருப்பது போன்ற பல பிரச்சினைகளும் தடங்கல்களும் காணப்படுகின்றன.

அபிவிருத்தித் திட்டங்களைச் சரிவர நடைமுறைப்படுத்த புள்ளிவிவரத்தரவுகள் மிக முக்கியமானவை. விளைநிலங்களை மதிப்பீடு செய்வதற்கான தகவல்கள் போதியளவு கிடைக்க வேண்டும். இவை துல்லியமாகத் தெரிந்தால்தான் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாகவும் திட்டமாகவும் செயற்படுத்த முடியும்.

எனவே, யாழ் மாவட்டத்தில் விவசாய அபிவிருத்திக்கென எதிர்காலத்தில் திட்டங்களை வகுப்பவர்கள் அபிவிருத்திக்குத் தடையாகக் காணப்படும். இதுபோன்ற பிரச்சினைகளையும் தடங்கல்களையும் நீக்குவதற்குரிய மாற்று ஒழுங்குகளை ஏற்படுத்திக்கொண்டு திட்டச் செயற்பாடுகளை மேற்கொண்டால் குறிப்பிட்ட அபிவிருத்தியில் நாம் எதிர்பார்க்கும் வெற்றி இலக்குகளை நிச்சயமாக அடையலாம் என்பது உதியாகும். ▲

---

மலையகப் பிரதேசத்தில்

# இ.தொ.காவை சிதைப்பதற்கு. முயல்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

## சாடுகின்றார் வீ.புத்திரசிகாமணி

மலையகப் பகுதிகளில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சக்தியைக் குறைப்பதற்கு மேற்கொள்ளும் சதித்திட்டமாகும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் பதுளை லுணுகலையில் நடைபெற்ற இ.தொ.காவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வீ.புத்திரசிகாமணி குற்றம் சுமத்தினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

1947ஆம் ஆண்டிலும் இந்த் நிலைமை ஏற்பட்டது. இன்று நாடாளுமன்றில் இ.தொ.காவின் அரசியல் பலம் கணிசமான அளவில் உள்ளது. மலையகத்தில் பலம் வாய்ந்த ஓர் அரசியல் சக்தியாக அது திகழ்கின்றது. இப்படிப பலம் வாய்ந்த அமைப்பாகத் திகழும் இ.தொ.காவை சிதைப்பதற்கு மலையகத்தில் உள்ள மாற்றுக்கட்சியொன்றுடன் இணைந்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மா.க.ஈழவேந்தன் போன்றோர் முயற்சிக்கின்றனர்.

இ.தொ.கா. என்றுமே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் போராட்டத்தை ஆதரித்தே வந்துள்ளது. அவருக்கு தார்மீக ஆதரவை நாம் தொடர்ந்தும் வழங்கிவருகின்றோம். இப்படியான ஒரு சூழ்நிலையில் மலையகத்துக்குள் பிரவேசித்திருக்கும் கூட்டமைப்பு எம்.பிக்கள் இ.தொ.காவை சிதைக்க முற்படுவது எந்தளவில் நியாயமானது என்று கேள்வியெழுப்பினார் அவர். (க)

## எதிரணியினருக்கு தலைமைப் பதவிகள்

நாடாளுமன்றத்தில் பிரதான கணக்குகளைப் பேணும் குழுவுக்கான தலைமைப் பதவியும், நாடாளுமன்றத்தில் உயர் பதவியினை மேற்பார்வை செய்யும் குழுவுக்கான தலைமைப் பதவி யும் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படும் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தவுடன் இது தொடர்பான முடிவை எடுத்ததாகவும், கடந்தகால ஆட்சியின் போதும இத்தலைமைப் பதவிகள் எதிர்க்கட்சியினருக்கே வழங்கப்பட்டிருந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)



ஆசிரியர் முத்துக்குமாரு கண்ணகுமாரின் 11ஆம் தர 'சமூகக்கல்வியும் வரலாறும்' (இரண்டாம் பதிப்பு) நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் நூலாசிரியரால் மாலை அணிவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# அறிவித்தல்

இத்தால் சகலருமறிய வேண்டியது யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, வரிமதிப்பிலக்கங்கள் 177, 177A, 177B, 177C, 177D, 177/3, 177/4, 177/5 கொண்ட கடைக்கட்டடங்களுக்கு மானிப்பாயைச் சேர்ந்த முத்து சுந்தரமூர்த்தி என்பவரே சட்டபூர்வமான உரிமையாளரென்றும் குறித்த கடைக்கட்டடங்கள் அமைந்துள்ள காணிக்கும் அவரே சட்டபூர்வமான குத்தகைக்காரரென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேலும், குறித்த கடைகளை அல்லது ஆதனத்தை அல்லது அதைச் சேர்ந்தவற்றை எவரும் குறித்த சுந்தரமூர்த்தியைத் தவிர வேறு எவர் மூலமாகவும் கையாடல் செய்யவேண்டாம் என இத்தால் சகலரும் எச்சரிக்கப்படுகின்றார்கள்.

2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04ஆம் திகதி.

(33792) (24-11-19-26) **கனகரத்தினம் கேசவன்,**
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.

---

*கிளி/வலயக்கல்விப் பணிமனை*
*ஆசிரிய ஆலோசகர்(சித்திரம்)*

**திரு.மரியநாயகம் அன்ரன் யோசவ் (இ.ஆ.சே I)**

அவர்களின் கல்வி, கலைச்சேவை நலனைப்
பாராட்டுகின்றோம
2004.06.03



**பணிகளின் களம்**

*1970. 05. 06 – 1972. 12. 31 யா/கைதடி நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை*
*1973. 01. 01 – 1974. 12. 31 யா/பலாலி ஆசிரியர் கலாசாலை*
*1975. 01. 01 – 1982. 05. 18 யா/கைதடி நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை*
*1982. 05. 19 – 1988. 05. 31 கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரி*
*1988. 06. 01 – 1992. 04. 31 கிளி/திருவையாறு ம. வி.*
*1992. 05. 01 – 1993. 04. 31 கிளி/வட்டக்கச்சி ம. வி.*
*1993. 05. 01 – 2004. 06. 03 கிளி/வலயக்கல்விப் பணிமனை ஆசிரிய – ஆலோசகர்.*

இலங்கை நுண்கலைக் கல்லூரியில் பயின்று, 34 வருட கல்விப் பணியில் பல்துறைப் பணியாற்றி கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மத்தியில் நிரந்தர இடம் பெற்றீர். கல்விப்பணியென்பது எவ்வளது புனிதமானது. அர்ப்பணிப்பு, தியாகம் நிறைந்தது என்பதைத் தங்களில் கண்டோம். எமது நன்றிகள் என்றும் நிறைவுடன் வாழ ஆண்டவன் அருள்வரம் வேண்டுகின்றோம்.

(33809)(37-11-19-26) - **நண்பர்கள்.**

---

உ

**மறைந்த தெய்வானை சொக்கலிங்கம் அவர்களின்**

## பிறந்தநாள் நினைவலை

பிறந்த நாள் 06 – 07 – 1931



மறைந்த நாள் 04 – 02 – 2004

ஆறுதல் கூறி அரவணைத்த உன்னுடலம்
நீறுபட என்னுள்ளம் நீறானதே - கூறுமொழி
அற்றேன் அலமந்தேன் அன்பான தெய்வியுனை
உற்றடையும் நாளை உரை.

உன் க(ண்)ணவன்
க.சொக்கலிங்கம்
*(சொக்கன்)*

*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (c/35998)(11-19-26)

---

# கண்ணீர் அஞ்சலி



எமது மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர் மாணவன் கஜேந்திரனின் அன்புத் தந்தையார்

| அன்னையின் மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 05.01.1948 | 01.07.2004 |

காளிகோவிலடி, குப்பிளான் வடக்கு,
ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் சோமலிங்கம் கணேசலிங்கம்**

*(கட்டடநிர்மாணத் திணைக்கள பிரதம எழுதுவினைஞர்)*

விழுதுகள் பல பரவ வேராய் இருந்தவரே!
மண்ணில் நீர் வீழ்ந்திட்டதேனோ?
எம்மை விட்டு மறைந்திட்டதேனோ?
மெழுகுவர்த்தியாய் சுடர்விட்டவரே!
மெழுகாய் நீங்கள் உருகியதேனோ?
உயிர் கொடுத்தவரே, உறவளித்தவரே!
உருகி உம் புதல்வர்கள் கதறுகின்றனரே!

*உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிச் சமூகம்.

(சி/35958)(37-11-19-26)

---

## தமிழகத்திலிருந்து திரும்பிய 29 இலங்கை அகதிகள் கைது!

இலங்கை அகதிகள் 29பேர் தமது சொந்தப் பணத்தில் இந்தியப்படகு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தபோது இலங்கைக் கடற்படையினரால் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாகத் தலைமன்னார் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலீஸார் இவர்களைக் கடந்த சனிக்கிழமையன்று மன்னார் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்டப் பதில் நீதிவான் எம்.பி. பாறூக் அகதிகளை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பஉத்தரவிட்டார். அவர்கள் பற்றிய விவர அறிக்கை ஒன்றை எதிர்வரும் 16ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு அப்பகுதிக் கிராம அலுவலருக்குப் பணிப்புரை வழங்கினார். அத்துடன் படகோட்டிகள் 4பேரையும் அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் உத்தரவிட்டார். (க)

## போலிக் கச்சேரி தொடர்பாக அதிகாரிகளிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம்,ஜூலை6

யாழ். அரியாலைப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட போலி ஆவணங்கள் தயாரிக்கும் 'மினிக் கச்சேரி' தொடர்பாக அதிகாரிகளிடமிருந்து யாழ். பொலீஸ்நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் வாக்கு மூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை அரியாலைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலீஸார் அங்கிருந்து பெருந்தொகையான போலி ஆவணங்கள், சான்றிதழ்கள் மற்றும் இறப்பர் முத்திரைகள், அரச அதிகாரிகளின் காகித் தலைப்புக்கள், பூர்த்திசெய்யப்படாத படிவங்கள் என்பவற்றை மீட்டனர். அத்துடன், இருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மீட்கப்பட்ட ஆவணங்கள் குறித்து அவைகுறிப்பிட்ட அதிகாரியால் வழங்கப்பட்டதா? அல்லவா? என்பது பற்றி அவர்களது வாக்குமூலங்களைப் பதிவுசெய்து வருகின்றனர்.

இதுவரை சுமார் 20 அரச அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று குற்றத்தடுப்புப் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-7)

## குருநகர் பாலத்தைத் திருத்துக; மாநகர சபைக்குக் கடிதம்!

யாழ்ப்பாணம்,ஜூலை6

குருநகர் கடற்கரை வீதியிலுள்ள வடிகாலுக்கு மேலாகப் போடப்பட்டுள்ள பாலம் மோசமடைந்துள்ளதால் அதனைத் திருத்தியமைத்துத் தருமாறு குருநகர்ப் பகுதிப் பொது அமைப்புகள் மாநகர சபையினரிடம் கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல மாதங்களாக இப்பாலம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் பயணிகள் குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள் எனப் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் இனனமும் எதுவித முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அடுத்த மாதம் குருநகர்ப் பகுதியிலுள்ள பரிசுத்த கார்மேல் மாதா ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகவுள்ளதால் இந்தப் பாதையினையே பக்தர்கள் பெரும்பாலும் பயன்படுத்துவர்.

ஏனவே, அவர்களுடைய நலனைக் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கையெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-13)

## பொலீஸ் பதவி உயர்வுகளில் குளறுபடி என்று குற்றச்சாட்டு

### வழக்குத் தாக்கல் செய்யவும் ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 6

பொலீஸாருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் பாரபட்சமானவை எனவும், தகுதி அடிப்படையில் அவை வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்து நீண்டகாலமாகப் பொலீஸ் சேவையில் கடமையாற்றும் நூற்றுக்கணக்கான பொலீஸார் மனிதவுரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதற்கும், வழக்குத் தொடர்வதற்கும் முடிவுசெய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

பொலீஸ் திணைக்களத்தில் கடமையாற்றிய மூவாயிரம் பொலீஸாருக்குக் கடந்த திங்கட்கிழமை பொலீஸ் ஆணைக்குழுவால் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. இந்தப்பதவி உயர்வுகள் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் சிபாரிசின் பின்னரே தீர்மானிக்கப்பட்டன.

இப்பதவி உயர்வுகள் பக்கச் சார்பாகவே வழங்கப்பட்டிருக்கின்றன. அரசியல் தலையீடு காரணமாக உரியவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை எனப் பாதிகைப்பட்ட பொலீஸார் போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

இவ்விடயம் பற்றி பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் அமைப்பின் தலைவர் டேல்குணரத்ன தெரிவித்துள்ளதாவது:-

பதவி உயர்வுகள் வழங்கப்படாமைக்காக மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால், வழங்கப்பட்ட விதம் முற்றிலும் பிழையானது. பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்காமல் அவர்களுக்குக் கீழே சேவை புரிபவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு வழங்கும் விதம் குறித்து பொலீஸ் ஆணைக்குழுவுக்கு நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். இருப்பினும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. பொலீஸ்மா அதிபர்கூட இந்தப் பதவி உயர்வுகள் தொடர்பாக அதிருப்தி அடைந்துள்ளார். தகுதியுடையோர் புறக்கணிக்கப்பட்டுத் தகுதியற்றோருக்கு பதவியுயர்வு வழங்கியிருப்பது கண்டிக்கப்படவேண்டியது என்றார். (க)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கதிர்காமு சிவமணி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வீமன்காமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமு சிவமணி அவர்கள் 02.07.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் விசுவர் - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும் வயித்தி கதிர்காமுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவர் கந்தையா, விசுவா அன்னம்மா, கந்தையா சின்னமணி மற்றும் அருணாசலம் விசாலாட்சி, விசுவர் பெரியதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா சின்னாட்சி, வயித்தி அம்பலம், அப்பையா, தெய்வானை (பிரான்ஸ்), கணபதிப்பிள்ளை தங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2004) புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் தற்காலிக முகவரியான இல.36, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கில் (குகன் எரிபொருள் நிலையம் முன்பாக) நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*36, பலாலி வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*திருநெல்வேலி.* (33803)(43-11-19-26)

தகவல்:
வ.கதிர்காமு *(கணவர்).*

## அப்பையா சந்திரகுமார்



169/5, 2 ஆம் ஒழுங்கை, அரசடி நல்லூரைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா சந்திரகுமார் (சந்திரன்) பிரான்ஸில் 28.06.2004 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் சஞ்சிராணியின் அன்புக் கணவரும் சனோசியன், சயந்தன், சயிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செ.அப்பையா மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும் கொக்குவில் பிடாரி கோவிலடியைச் சேர்ந்த க.தம்பிராசா, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், அ.குணரட்ணம் (குணசிங்கம்), அ.இரத்தினசிங்கம், அ.பாலசிங்கம், அ.தர்மகுலசிங்கம், அ.தேவன் (செல்லக்கிளி - ஜேர்மனி), ந.நாகேஸ்வரி அம்மா (கிளி - ஜேர்மனி), ப.நகுலேஸ்வரி அம்மா (சண்முகவடிவு - ஜேர்மனி), ஜெ.உமா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பூ.நவரெட்ணராசா (ஜேர்மனி), செ.பத்பதைன் (ஜேர்மனி), மு.ஜெகன் (ஜேர்மனி), கு.தனலட்சுமி, இ.செல்லப்பாக்கியம், பா.தங்கமணி, த.சந்திரேஸ்வரி, கே.தனம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2004) செவ்வாய்க் கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*169/5, 2 ஆம் ஒழுங்கை,*
*அரசடி றோட், நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (33796)(37-11-19-26)

தகவல்:
அ.சின்னத்தங்கம் *(தாய்),*
பிள்ளைகள்.


# இசுசு ஜேனி பஸ் விற்பனைக்கு

**GR XXXX (கஸ்ரம் ஜேனி பஸ்)**
**60 ஸ்ரீ XXXX (ஜேனி) தொடர் இலக்கங்களைக் கொண்ட கஸ்ரம் ஜேனி பஸ்கள் விற்பனைக்குண்டு.**

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
தி.ஸ்ரீதரன்
யாழ்ப்பாணம்,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
தொ.பே.இல.: 0777 - 110832

(சி-35995) (24-11-19-26)

# ஆரம்பப் பாடசாலைகள் கல்வி வளர்ச்சியில் உயர்ந்தளவு முக்கியத்துவம் உடையன

சூடாநாட்டின் கல்வித்தரத்தை மீண்டும் எழுச்சியுறச் செய்வதற்குரிய செயற்பாடுகள் எமது கல்விச் சமூகத்தின் பல படிநிலைகளில் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், கல்வித்தரம் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களைக் கண்டறியும் ஆராய்ச்சிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கண்டறிந்த காரணங்களை நிவர்த்தி செய்யும் செயற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், 'ஆரம்பப் பாடசாலைகளினதும், ஆரம்பக் கல்வியினதும் மிக உயர்ந்த முக்கியத்துவம் எமது கல்விச் சமூகத்தில் நன்கு உணரப்படாது இன்றும் அடிமட்ட நிலையில் காணப்படுகின்றமையும் எமது கல்வித்தரம் வீழ்ச்சியுறுவதற்குரிய பிரதான காரணங்களில் ஒன்று என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும்.

அதாவது மாணவர்களின் அறிவு விருத்திக்கு உயிர் நாடியான ஆரம்பக் கல்விக்கும், அதனை வழங்கும் ஆரமபப் பாடசாலைகளுக்கும் எமது கல்விச் சமூகம் ஆதரவு வழங்குகின்ற தன்மை மிகவும் குறைவு என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

## ஆரம்பக் கல்வி

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பது ஆன்றோர் வாக்கு. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பது தமிழ் பொன்மொழி. ஆனால், இன்று குடாநாட்டில் தாய்மொழியாகிய தமிழ்மொழி மூலக்கல்வியே பிரதானமாக வழங்கப்படுகின்றபோதிலும் க.பொ.த. சாதாரண வகுப்பு மாணவர்களில் பெரும்பான்மையோர் அடிப்படையான தமிழ அறிவும், கணித அறிவும் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது, எழுத்து, கருத்து, இலக்கணம் என்பவற்றில் பிழையின்றி தமிழ்மொழியில் ஒரு வாக்கியத்தை எழுத முடியாத மாணவர்களே கூடுதலாக க.பொ.த. சாதாரண தர வகுப்புகளில் படிக்கின்றனர். அத்துடன், கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற அடிப்படைக்கணித அறிவுத் தேர்ச்சியும் பெரும்பாலான க.பொ.த. சாதாரணதர மாணவர்களிடம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால், இன்றைய கல்வி முறையின் வகுப்புத் தேர்ச்சி முறைகள் மூலம் அடிப்படையான தமிழ், கணித அறிவுகள் இல்லாத மாணவர்களும் க.பொ.த. சாதாரண வகுப்பு வரை தேர்ச்சி அடைந்து விடுகின்றனர்.




பொதுப் பரீட்சையாக நடைபெறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளே ஒரு மாணவனின் அடிப்படைத் தமிழ் அறிவு, கணித அறிவு என்பவற்றின் பாதிப்பை முதன் முதலாக வெளிக்காட்டுகின்றன. அத்துடன், ஒரு மாணவனின் தமிழ் அறிவு, கணித அறிவு, என்பவற்றின் பிரதிபலிப்புகள் ஏனைய பாடங்களின் பெறுபேறுகளிலும் வெளிப்படுத்தப் படுகின்றன. இதற்கு காரணம் என்ன?

11 ஆம் தரத்தில் படிப்பிக்கும் ஆசிரியர், 10 ஆம் தரத்தில் படிப்பிக்கும் ஆசிரியர் மீது பழியைப் போடு

**அதனை உணர்ந்து கொள்ளாமையும் கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்**

கினறார். 10 ஆம் தரத்தில் படிப்பிக்கும் ஆசிரியர் 9 ஆம தரத்தில் படிப்பிக்கும் ஆசிரியர் மீது பழியைப் போடுகின்றார்.

இந்த வரிசையில் கீழ் நோக்கிச் சென்று முழுப்பழியையும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் மீது போட்டுவிட்டுப் பெரும்பாலான ஆசிரிய சமூகம் தப்பித்துக் கொள்கின்றது.

உண்மையான காரணம் என்ன? இன்றைய கலைத் திட்டத்தில் பல பாடங்கள் மாணவர்களுக்குக் கற்பிக்கப் படுகன்றன. ஒவ்வொரு பாடத்தையும் கற்பிப்பதற்குத் தனித தனியான ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். அத்துடன், ஒரு குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் தமது பாடப்பரப்புக்குரிய குறுகிய வட்டத்தினுள் மட்டும் நின்று கற்பிக்கின்றார். வெளி உலகை மாணவர்களுக்குக் காட்டுவது மிகவும் குறைவு. அதாவது, தமிழ், கணிதம் ஆகிய பாடங்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்கள் மட்டுமே மாணவர்களின் அடிப்படைத் தமிழறிவு, கணித, அறிவு என்பவற்றை வளர்ப்பதற்குப் பொறுப்பானவர்கள் என்று கூறிக்கொண்டு ஏனைய பாடங்களைப் படிப்பிக்கும் ஆசிரிய சமூகம் மிகப் பெரிய பொறுப்பிலிருந்து விலகிநிற்கும் நிலை குடாநாட்டுக் கல்விச் சமூகத்தில் நீண்ட காலமாகக் காணப்படுகின்றது.

## இதன் விளைவு என்ன?

க.பொ.த. சாதாரணதர பெறுபேறுகள் வீழ்ச்சியடைவது மட்டுமன்றி ஏறக்குறைய பதினொரு வருடங்கள் தாய் மொழியாகிய தமிழ்மொழி மூலம் படித்தபோதிலும் இலக்கணப பிழையின்றி ஒரு தமிழ் வாக்கியத்தை எழுதமுடியாத மாணவர் கூட்டம் எமது பாடசாலைகளில் இருந்து சமூகத்தினுள் கேள்விக் குறியான நிலையில் விடப்படுகின்றது.

இந்த நிலையிலேயே ஆரம்பக் கல்வியினதும் ஆரம்பப் பாடசாலைகளினதும் கூடிய முக்கியத்துவம் எமது கல்விச் சமூகத்தில் நன்கு உணரப்படாததன் பாதிப்புகள் எமது சமூகத்தில் வெளிப்படத் தொடங்குகின்றன.

அதாவது, அத்திவாரங்கள் அழுகின்ற நிலையில் கட்டடங்கள் ஜொலிப்பதால் பயன் ஏதும் இல்லை என்ற உண்மையை நாங்கள் பெரும்பாலும் மறந்துவிடுகின்றோம்.

## ஆரம்பப் பாடசாலைகள்

ஒரு மாணவனின் கல்வியறிவு விருத்தியில் முன்பள்ளிகள், ஆரம்பப் பாடசாலைகள், இடைநிலைப் பாடசாலைகள், உயர்தரப் பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவை நேரடியாகத் தொடர்புபட்ட போதிலும் முன்பள்ளிகள், ஆரம்பப் பாடசாலைகள் என்பவற்றின் பாதிப்புக்களே மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. காரணம், கட்டடங்கள் நிலைத்து நிற்பதற்கு அத்திவாரங்கள் உறுதியாக இருப்பது மிக அவசியம். அத்திவாரங்கள் தளர்ந்து தள்ளாடும் நிலையில் அவற்றின் மீது கட்டப்படும் கட்டடங்கள் சரிந்து விழாது உறுதியாக இருக்கும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், யாழ். கல்விச் சமூகத்தில் உண்மையில் நடப்பது என்ன? அரசகல்வி நிறுவனங்களும் தனியார் கல்வி நிறுவங்களும் கடுமையான போட்டி முறையில் இடைநிலைக் கல்வி, உயர்தரக் கல்வி என்பவற்றுக்கு வழங்கும் முக்கியத்துவமானது ஆரம்பக்கல்விக்கு வழங்கப்படுவது மிகவும் குறைவு. யாழ். நகரப் பகுதியில் உள்ள விரல்விட்டு எண்ணக கூடிய ஓரிரண்டு ஆரம்பப்பாடசாலைகளைத் தவிர கிராமப் புறங்களில் உள்ள பெரும்பான்மையான ஆரம்பப் பாடசாலைகள் வசதி, வாய்ப்புகள் இன்றி அநாதாரவான நிலையிலேய இயங்கிக் கொண்டு இருக்கின்றன. கிராமப் புறங்களில் உள்ள சமூகசேவை நிறுவனங்கள் கூட இந்த ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஆதரவு வழங்குவது மிகவும் குறைவு. பெரிய பாடசாலைகளுக்கு லண்டன் கிளை, கனடாக் கிளை என்று பழைய மாணவர் சங்கங்கள் உலகம் முழுவதும் இயங்கிக்கொண்டு இருந்தாலும், இந்த ஆரம்பப் பாடசாலைகளுக்கு உள்ளூரிலேயே சேவைத் திறன் மிக்க பழைய மாணவர் சங்கங்கள் செயற்படுவது மிகவும் குறைவு.

அத்துடன், பெரும்பாலான ஆரம்பப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் ஆண்டுதோறும் ஆசிரியர் தின விழாக்களை விமரிசையாக நடத்துவதுடன் பாடசாலைக்கு வழங்கும் ஆதரவை மட்டுப்படுத்திக் கொள்கின்றன. அத்துடன் கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளில் படித்ததைக் கூறுவதற்கு வெட்கப்படுகின்ற பழைய மாணவர்களும் எமது குடாநாட்டுக் கல்விச் சமூகத்தில் உள்ளனர். அதாவது, நகரப்புற உயர்தரப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் என்ற பெருமையாகக் கூறுகின்ற சிலர், ஆரம்பப் பாடசாலைககளின் பழைய மாணவர்கள் என்று கூறுவுதற்கு வெட்கப்படுகின்றனர். உதாரணமாக, கிராமப்புற ஆரம்பபாடசாலை ஒன்றில் படித்து ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து நகரப்புறத்தில் உள்ள தேசியப் பாடசாலைக்குக் செல்கின்ற மாணவன், சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைநத பின்பு தேசியப் பாடசாலையையும் அங்கு உயர்தர வகுப்பில் கற்பித்த ஓரிரண்டு ஆசிரியர்களையும் நினைவு கூருவானேயன்றி, ஆரம்பப் பாடசாலையையும் அங்கு கற்பித்த ஆசிரியர்களையும் நினைவு கூருவதற்கு வெட்கப்படும் நிலையே யாழ். கல்விச் சமூகத்தில் கூடுதலாகக் காணப்படுகின்றது.

"பட்டணத்தைப் பார்க்கப்போன பட்டிக்காட்டு மாமா, கிராமப்புறத்தில் ஓலைக் குடிசையில் வசிக்கின்ற தனது பெற்றதாயை "அம்மா" என்று கூப்பிடுவதற்கு வெட்கப்பட்ட கதையை இதற்கு ஒப்பிடலாம்.

அதாவது, குடாநாட்டுக் கிராமப்புறங்களில் இயங்கும் பெரும்பாலான ஆரம்பப் பாடசாலைகள் அரச, சமூக ஆதரவு குறைந்த நிலையில் அதிபர்கள், ஆசிரியர்களின் கடுமையான பிரயத்தனத்தின் மத்திலேயே மாணவர்களின் கல்விககான அத்திபாரத்தைக் கட்டிக்கொண்டிருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

## ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்

ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் இங்கு நன்கு உணரப்படாததால் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குரிய கௌரவத்தை எமது கல்விச் சமூகம் வழங்குவது குறைவு ஆனால், ஆரம்பக்கல்வியானது குழந்தைகளின் உளவியலுடன் கூடுதலாகத் தொடர்புபட்டதால் டென்மார்க் போன்ற நாடுகளில் பட்ட மேற்படிப்புத் தகைமை உடையவர்களே ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். மொன்ரிசொறி அம்மையார் என்ற வைத்தியநிபுணரே முன்பள்ளிகளின் உருவாக்கத்துக்கான காரணகர்த்தா என்று போற்றப்படுகின்றார்.

ஆனால், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாகவே எமது கல்விச் சமூகத்தால் பெரும்பாலும் நோக்கப்படுகின்றனர். உதாரணமாக, ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்தரக்கல்வி ஆகியன ஒரே தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களால் ஒதுக்கப்பட்டுத் தனிமைப் படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றனர். இதனால் ஆரம்பககல்வி நெறியைத் தெரிவு செய்யும் பயிற்சி ஆசிரியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆசிரிய கலாசாலைகளிலும், தேசிய் கல்வியியல் கல்லூரிகளிலும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

அத்துடன், பட்டமேற்படிப்புப் போன்ற உயர் கல்வித்

**சுப்பிரமணியம் சிவநேசராசன்**
**(ஆசிரியர் -கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)**

தகுதி பெற்றவுடன் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களில் பலர் உயர்தரப் பாடசாலைகளை நோக்கிப் பாய்ந்து செல்லும் வழமையும் கூடுதலாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன? உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களிலும் பார்க்க கூடுதலான மதிப்பையும் கௌரவத்தையும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய எமது கல்விச்சமூகம் மிகப் பெரிய பொறுப்பில் இருந்து விலகிநிற்கின்றமை ஆகும்.

இதனால், பெரும்பாலான ஆரம்பப் பாடசாலைகள் ஆரமபக் கல்வி ஆசிரியர்கள் பற்றாக்குறையுடனேயே இயங்கிக்கொண்டு இருக்கின்றன.

இதன் பிரதிபலிப்பே அடிப்படையான தமிழ், கணித அறிவுத் தேர்ச்சி குறைந்த மாணவர் கூட்டம் க.பொ.த. சாதாரணதர தகைமைச் சான்றிதழ்கூட அற்ற நிலையில் ஆண்டுதோறும் பாடசாலைகளில் இருந்து சமூகத்தினுள் விடப்படுகின்றமை ஆகும்.

அத்துடன், ஆரம்பக்கல்வி தொடர்பான ஆராய்ச்சிகளும் எமது குடாநாட்டில் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்களில் மிகக்குறைவாகவே நடத்தப்படுகின்றன என்பது யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை ஆகும். ஆகவே, யாழ். பல்கலைக்கழகம், ஆசிரிய கலாசாலைகள் தேசிய கல்வியியல் கல்லூரி, தேசிய கல்வி நிறுவகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் ஊடாக ஆரம்பக் கல்வி தொடர்பாக ஆராய்ச்சிகள் கூடுதலாக மேற்கொள் எப்படுவதன் மூலம் எமது கல்விச் சமூகத்தில் ஆரம்பக் கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தமுடியும். ◆

## கல்விச்சாலைக் காட்சிகள்



புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கித் திறப்புவிழாவில் உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் சி.மணியன் உட்பட விருந்தினர்களும் படத்தில் காணப் படுகின்றனர். *(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*



நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் நிறுவப்படவுள்ள மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டுவைத்த யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அதிபர் எஸ்.சேதுராஜா, இளைப்பாறிய கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இ.ஐயாத்துரை, இளைப்பாறிய மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா, யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் கே.வீரபத்திர பிள்ளை ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*



மயிலணி சைவமகா வித்தியாசாலைக்கான பெயர் வளைவை யாழ்ப்பாணம் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைப் பகுதிப்பொறியலாளர் செல்வி சாந்தாதேவி தர்மரத்தினம் அண்மையில் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

அதிபர் த.சற்குணசர்மா, உப அதிபர் செ.ஞானச்சந்திரன் மற்றும் பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)*



பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.கையலாயபிள்ளை, விளையாட்டு குழுச் செயலாளர் க.உதயகுமார் முன்னிலையில் மாணவர் ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்வதைப் படத்தில் காணலாம். *(படம்:தென்மராட்சிச் செய்தியாளர்)*



சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திருமதி ரி.இராஜரட்ணம் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

### சமயச்சடங்கு நடத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது

# நலிவடைந்த மக்களின் புனர்வாழ்வுக்கு உதவவும் ஆலயங்கள் முன்வர வேண்டும்

## சிவபூமி பாடசாலை திறப்புவிழாவில் யாழ்.நீதிவான்

யாழ்ப்பாணம்,ஜூலை6

கடந்தகால யுத்தம் காரணமாக வாழ்வு சீரழிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்குரிய திட்டங்களை ஆலய நிர்வாகங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். கிராமமட்டத்தில் இருந்து இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இப்படி ஆலோசனை ஒன்றை முன்வைத்துள்ளார் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா

கோண்டாவிலில் நடைபெற்ற சிவபூமி சிறுவா மனவிருத்திப் பாடசாலையின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

நாம் எத்தகைய தொழிலையோ, வேலையையோ செய்யலாம். ஆனால் நாம் செய்யும் கடமையை எமது மனச்சாட்சிக்கு அமைய நேர்மையாக - நிதானமாக - சரியாக - விசுவாசமாகச செய்வோமானால் நிச்சயமாக அது இறைவனை வழிபடுவதற்கு ஒப்பானதாகும். அவ்வாறு எமது இளம் சமுதாயத்தைச் செயற்பட வைத்தால் சமூகச் சீர்கேடு என்ற பெயருக்கோ, சொல்லுக்கோ இடமிராது.

யுத்தத்தினால் பல்த்த இழப்புக்களைச் சநதித்த வறிய மக்களது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்ப ஆக்கபூர்வமான திட்டங்கள் முனனெடுக்கப்படவேண்டும். குறிப்பாக, ஆன்மீக ரீதியிலான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை ஒவ்வொருவரும் நன்றாக மனதில் பதித்துச் செயற்பட வேண்டும்.

இந்த நிலையில் போரால் சீரழிந்து சிதறிப் போய் இருக்கின்ற எமது சமயப் பண்பாடுகளை மீளக் கட்டியெழுப்ப ஒரு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்கு உதாரணமாக செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின முன்முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையைக் குறிப்பிடலாம்.

இன்னொரு வகையில் வெளிநாட்டிலுள்ள எம்மவர்களின் உதவியினால் குடாநாட்டிலுள்ள பல ஆலயங்கள் மீளப் புனரமைக்கப்பட்டு, வாணம் பூசப்பட்டுச் சிறப்பாக இயங்குகின்றன. இது மகிழ்வுக்குரிய விடயம். ஆனால் அதிலும் முககியமான அம்சம் என்னவெனில், போர்க் கால நிலைமைகளால பாதிக்க்ப்பட்டவர்கள் வறியவர்களாக, ஊனமுற்றவர்களாக, விதவைகளாக மாறிவிடும் சைவ சமயத்தவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய ஆலயங்கள் ஆக்கபூர்வமான முறையில் சிந்திக்க வேண்டும்.

நாம் கோயிலுக்குச் சென்று அல்லது வீடில வைத்திருக்கும் படத்தை வழிபட்டு வந்தால் மட்டும் போதாது. ஒவ்வாரு கணமும் விழிப்புணர்ச்சியுடன் நிதானமாக அவதானமுடன் எமது மனம ஒருங்கிணைக்கப்படவேண்டும். இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டு விழிப்புணர்வுடன் ஆன்மீகமாகச் செயற்பட்டால் மட்டுமே நாம் இறைவனை அடைய முடியும்

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் அமைப்பு முயற்சியில் ஈடுபட்ட புண்ணிய சீலர்கள் முதலில் பாராட்டப்பட வேண்டியவர்கள். செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் வெளிநாடுகளுக்குச் சென்று சொற்பொழிவாற்றிப் பெற்று வந்த நன்கொடைகளைக்கொண்டு இந்தப் பாடசாலையை அமைத்திருக்கிறார். இந்தப் பணிகளில் கண்சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் குகதாசனும் பெரும்பங்கு வகித்திருக்கின்றார்.

ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுப்பது போல இந்தத் தேரையும் இழுக்கவேண்டும். ஆனால், இது பத்திரமான தேர். மிகத் தந்திரமாக இழுக்க வேண்டும். இவர்களது மனங்களை மெதுமெதுவாக உயர்த்திக்கொண்டு செல்லவேண்டும்.

இவர்களுக்குக் கல்வியூட்டும் ஆசிரியர்கள் போற்றத்தக்கவர்கள். இவர்களது பணி உயர்ந்தது. இந்த சிவபூமி பாடசாலையில் கற்கும் பிள்ளைகள கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன் - என்றார்.

ஆறு.திருமுருகன் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

மனவிருத்தி குன்றிய மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இவ்வாறான ஒரு பாடசாலை ஒன்று இல்லையென்று பலர் சுட்டிக்காட்டினார்கள். இந்தப் பாடசாலையின் தேவை பற்றி நான் பலரிடம் எடுத்துக்கூறினேன்.

அவர்கள் இந்தப் பணி கடினம் என்று கைவிரித்துவிட்டார்கள்.

பின்னர் நான் வெளிநாடு சென்று அன்பர்களிடம் எடுத்துக்கூறினேன். அவர்கள் எனக்கு நிதியுதவி செய்து என்னை உற்சாகப்படுத்தினார்கள். வைத்தியகலாநிதி குகதாசனும் இந்தப் பாடசாலைக்குரிய காணியை இலவசமாக அன்பளிப்புச் செய்திருந்தார்.

மனவிருத்தி குன்றியவர்களுக்கென சிங்கப்பூரிலே ஒரு பாடசாலை உண்டு. அங்கு சென்ற போது அங்குள்ள மாணவர்கள் கணனியில் பல்வேறு நுட்பங்களையும் கற்றுக்கொண்டிருப்பதை நான் அவதானித்தேன். சிவபூமிப் பாடசாலை மாணவர்களும் திறமையானவர்கள். சிங்கப்பூர் மாணவர்களின் நிலைக்கு இவர்களையும் கொண்டு வரவேண்டும்.

வெளிநாடுகளில் மனவிருத்தி குன்றியவர்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால், எம்மவர்களோ இவ்வாறானவர்களைக் கண்டதும் ஏளனம் செய்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும் - என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குகையில் -

கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆலயங்களைப் புனரமைக்கச் சமயத்தின் பேரால புலம்பெயர்ந்த மக்கள் உதவுகின்றனர். ஆலயங்களுக்கு அப்பால் வைத்தியசாலைகள், அகதி முகாம்களுக்கு உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன.

ஆனால், இன்று புதிய பாதை ஒன்று திறக்கப்படுகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உதவும் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது - என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில்:

ஆலயங்கள் சமுதாயத்தின் தேவைகளைப பூர்த்தி செய்வதில் தம்து பங்களிப்பை வழங்க வேண்டும். இந்த வகையில் எமது ஆலயம் பலவித சமுதாயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. ஏனைய ஆலயங்களும் இந்தப் பணியில் ஈடுபட முன்வரவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன், லண்டனைச் சேர்ந்த ம.ஜெயசீலன், பேராசிரியர் தயா சோமசுந்தரம், பிரதிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர், மருத்துவபீடாதிபதி எஸ்.சிவபாலன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(எ-3-49)



சிவபூமி பாடசாலைத் திறப்புவிழாவில் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் பாடசாலையின் நிர்மாணப் பணிகளுக்கு பெருமளவில் நிதியுதவி வழங்கியவரும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமான ம.ஜெயசீலன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோரை ஏனையோரையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: கோண்டாவில் செய்தியாளர்)

HND
Delivered Locally ... Recognised Globally

Edexcel
International, UK

BTEC
HND
World Class Qualifications

HND Leads to BSc. (Hon.)

Delivered Locally...... Recognised Globally

**New Batch Starts on 14.07.2004 at 10.00 a.m.**

**கணணித்துறையில் பட்டப்படிப்பு**

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். Edexcel International நிறுவனத்தின் BTEC HND (Higher Natio Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினை தொடரமுடிம்..

**சர்வதேச சான்றிதழ்கள்**

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித் துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் Edexcel இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். Edexcel என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்**

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதாரரீதியாக நன்மை அடையமுடியும்

**தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்**

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது,

மேலதிக விபரங்களுக்கு 021 - 2222831 ∴ 021 - 2226933 அல்லது இல.100, மணிக்கூட்டுக்கோபுர வீதி, அமைந்துள்ள எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்

**Institute of Informatics Studies ( IIS )**
" An Edexcel Approved Training Centre"

100, Clock Tower Road, Jaffna
Email: iis@sltnet.lk T.P No: 021 2222 2831 / 021 2226933

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# விளையாட்டுத்துறை மூலம் தமிழ்த்தேசியத்துக்கு

**இலங்கை தேசிய கனிஷ்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட செல்வி நித்தியா இராஜரட்ணத்திடம் அவரது வெற்றிகள் குறித்து அவரை நேரில் சந்தித்து உரையாடினோம்.**

**எம்மை நாங்கள் அறிமுகப்படுத்தியதும் அன்போடு வரவேற்று உபசரித்த நித்தியா நாம் சென்றதன் நோக்கத்தைத் தெரியப்படுத்தியதும் தனது வெற்றிப் பாதையின் அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொண்டார். இலங்கைத் தேசிய அணியில் இடம்பெறுவதைவிட தமிழீழ தேசிய வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்று எமது தேசியத்தின் பெருமையையும் திறமையையும் வெளிக்காட்டுவதோடு அதனை நிலைநாட்டுவதே எனது நோக்கமாகும் என்று பெருமிதமடைந்தார் அவர்.**



நித்தியாவிடம் அவரது விளையாட்டு அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடிய நாம் அவருடைய ஆரம்பகால விளையாட்டுத்துறையைப் பற்றிக் கேட்டோம்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பிறந்த நான் எனது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்தரக் கல்வியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றுக்கொண்டிருக்கின்றேன்.

எனது பள்ளி வாழ்க்கையின் ஆரம்பகாலங்களில் உயரம் பாய்தல், 200 மீற்றர் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம் போன்ற தடகளப் போட்டிகளில் பங்குபற்றி கோட்ட, வலய ரீதியாகப்பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறேன்.

அத்துடன், எமது கல்லூரியின் 17 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்ட அணியில் விளையாடியுள்ளேன். அக்காலப்பகுதியில் நான் வலைப்பந்தாட்டத்தில் அதிக அக்கறை காட்டவில்லை.

# பெருமை சேர்ப்பதே எனது குறிக்கோள்



தேசியத் தலைவரிடமிருந்து சான்றிதழ் பெற்றபோது...

*கேள்வி:* கூடைப்பந்தாட்டத்தில் ஆர்வமுடன் விளையாடிய நீங்கள் வலைப்பந்தாட்டத்திற்கு மாறியதன் காரணம் என்ன?

*பதில்:* எனது சகோதரி (அக்கா) வலைப்பந்தாட்டப் பயிற்சியில் ஈடுபடும்போது நானும் கூடச்சென்று பந்துகளைப் எடுத்துக் கொடுப்பேன். இருந்தாலும், யாழ்.மாவட்ட முன்னாள் விளையாட்டு அலுவலரும் மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளருமாகிய திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் எனது விளையாட்டுத் திறனையும் ஆர்வததையும் இனங்கண்டு, வலைப்பந்தாட்டத்தில் ஆர்வம் கொண்டு விளையாடினால் எதிர்காலத்தில் பல சாதனைகளைப் படைக்க முடியும் என ஆலோசனை வழங்கினாா. அத்தோடு நிற்காது வேண்டிய பயிற்சிகளையும் வழங்கினார். அவரது அறிவுரைகளும், வழிகாட்டல்களுமே வலைப்பந்தாட்டத்தில் நான மிளிர்ந்து கொண்டிருப்பதற்கான அடிப்படைக் காரணம். அவருடைய அன்றைய முயற்சிதான் இன்று நான் தேசிய கனிஷ்ட அணியில் இடம பெற வழிசமைத்தது என்றால் மிகையாகாது.

அத்தோடு கூடைப்பந்தாட்டத்தில் கடின உடற்பயிற்சிகளைப் பெறவேண்டும்.இதனால் கூடைப்பந்தாட்டம், தடகளப் போட்டிகள் என்பவற்றில் எனக்கிருந்த ஆர்வத்தை முற்றுமுழுதாகக் குறைத்து வலைப்பந்தாட்டத்தில் தீவிர பயிற்சிகளை மேற்கொண்டேன். இதுவே தேசிய அணியில் இடம்பெறச் சந்தர்ப்பமாக அமைந்தது. வலைப்பந்தாட்ட அணியில் நான் ஆரம்பகாலத்தில் இலக்குத் தடுப்பாளராகவும் (Goal Defender) தற்போது கோல் போடுபவராகவும் (Goal Suiteler) விளையாடுகின்றேன்.

நான் 15 வயதில் இருந்து மாவட்ட மட்ட வலைப்பந்தாட்டக் குழுவில் விளையாடிக் கொண்டிருக்கிறேன்.

*கேள்வி:* வலைப்பந்தாட்டத்தில் நீங்கள் பங்கு பற்றிய முக்கிய ஆட்டங்கள் எவை?

*பதில்:* கிளிநொச்சியில் இடம்பெற்ற வடக்கு -கிழக்கு மாகாணமட்டப் போட்டி, தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழா, களுத்துறையில் இடம்பெற்ற சமாதான விளையாட்டுவிழா மற்றும் மாத்தறையில் நடைபெற்ற தேசிய விளையாட்டுவிழா போன்றவற்றில் பங்குபற்றினேன். இவற்றில் எமது அணி வெற்றிகளைப் பெற்று சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டது.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றி திறமையை வெளிக்காட்டிய காரணத்தினாலேயே தமிழீழ வலைப்பந்தாட்ட அணியில் இடம்கிடைத்ததோடு, இலங்கை தேசிய கனிஷ்ட அணிக்குத் தெரிவு செய்யப்படவும் வாய்ப்புக் கிடைத்தது.

*கேள்வி:* தமிழீழ வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்று தேசியத்தலைவரிடம் வெற்றிக் கிண்ணம பெறும்போது உங்கள் உணர்வுகள் எவ்வாறு இருந்தன?

*பதில்:* தமிழீழத் தாயகத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று அந்த நாடுகளின் அணிகளுடன் மோதி வெற்றிபெற்றது மிகவும் சந்தோசமான விடயம். தேசியத் தலைவரிடமிருந்து வெற்றிக்கிண்ணம் பெற்றது வார்த்தையில் அளவிடமுடியாத சந்தோசம். முதன் முறையாக தமிழீழத்தில் இருந்து ஓர் அணி அதுவும் பெண்கள் விளையாட்டு அணியில்வெளிநாடு சென்ற முதலனுபவம் எங்களுக்குக் கிடைத்தது. தேசியத் தலைவரின் ஆசியும், வழிகாட்டலும் தான் எங்களின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது.

**படங்கள்: வசந்தன்**

*கேள்வி:* தேசிய விடுதலைக்கு விளையாட்டுத் துறை மூலம் எவ்வாறு பங்களிப்புச்செய்வீர்கள்?

*பதில்:* விளையாட்டுத்துறையில் பெண்களின் பங்களிப்பு குறைவாகத்தான் காணப்படுகிறது. தமிழ்கலாசாரத்தை விளையாட்டுத் துறை மூலம் உலகிற்கு எடுத்துக்காட்டவேண்டும் என்ற எண்ணம் என்னிடம் குடிகொண்டுள்ளது. விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிய வலைப்பந்தாட்டப் போட்டியில் தமிழர் பாரம்பரியத்தை பேணுகின்ற உடையுடனே செல்ல இருக்கிறேன். இதனால், தமிழர் பண்பாடு பாதுகாக்கப்படுவதோடு, வெளி உலகிற்கும் எனது தமிழினத்தின் பெருமை புரிய வைக்கப்படும்.



யாழ் மாவட்ட வலைபந்தாட்ட பயிற்றுநருடன்...

சமூக முன்னேற்றத்திற்கு பெண்ணினத்தை விளையாட்டுத்துறையில் ஈடுபடுத்துவதன் மூலம் சாதனைகள் படைக்கமுடியும். கலாசார சீரழிவுக்குட்பட்டுச் செல்லும் எமது சமூகத்தை நிலை நிறுத்த விளையாட்டுத்துறையில் பூரணமாக அவர்களை ஈடுபடுத்தவேண்டும். திறமைகளை சரியான முறையில் இனங்கண்டு அர்ப்பணிப்புடன் இத்துறையில் ஒவ்வொருவரும் ஈடுபட வழி வகுக்கவேண்டும். இதற்கான களங்கள் சரியான முறையில் அமையும் என எதிர்பார்க்கிறேன்.

*கேள்வி:* விளையாட்டுத்துறை மூலம் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தமுடியுமா?

*பதில்:* நிச்சயமாக முடியும். விளையாட்டுத் துறை சார்பாக வேறு மாவட்டங்களுக்குச் செல்லும்போது இனங்களுக்கிடையே கலந்து பழகும் நிலை ஏற்படும். இதனால், தமிழ் - சிங்கள நட்புகள் வலுப்பெறும். இதுவே காலப் போக்கில் இனங்களுக்கிடையேயான பிரச்சினைகளை தீர்க்கவும் வழிவகுக்கும் என நம்புகிறேன்.

*கேள்வி:* வேறு மாவட்டங்களுடன் விளையாடப்போகும்போது உங்களுக்கு மொழி ஒரு பிரச்சினையாக அமைந்ததா?

பதில்: ஆம், ஆரம்பத்தில் மொழி ஒரு பிரச்சினையாகவே காணப்பட்டது. இதனால், ஆரம்ப காலங்களில் நான் வெகுவாகப் பாதிக்கப்பட்டேன். இதற்கு உதாரணமாக களுத்துறையில் இடம்பெற்ற சமாதான விளையாட்டு விழாவில் கலந்துகொண்டபோது தமிழ்ப் பிள்ளைகளைச் சரியான முறையில் பங்களிக்க விடவில்லை. அதுமட்டுமன்றி - பொது மொழியான ஆங்கிலத்தை கூடப் பேசாது தனிச் சிங்களத்திலேயே பேசினார்கள். அந்த நேரத்தில் மொழிபுரியாது, அழுதும் இருக்கிறேன். சிங்கள மொழியில் சிங்களப் பிள்ளைகளே விளங்கி அவர்களை விளையாட அனுமதித்தது எங்களுக்குபெரும் மனவேதனையாக இருந்தது. எமக்கு விளையாட இறுதியாக 5 நிமிடமே தரப்பட்டது. அந்த 5 நிமிடத்தில் விளையாடி எனது திறமையை வெளிக்காட்டியதாலேயே தேசிய அணியில் இடம்பிடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. தற்போது அந்த மொழிப் பிரச்சினையை எதிர் கொள்ளும் அளவுக்கு நான் மொழியை தெரிந்து கொண்டுள்ளேன். எனினும், இவ்வாறு இன, மொழி ரீதியான பாகுபாடு காட்டப்படுவதை நான் முற்றாக எதிர்க்கிறேன்.

ஆட்டத்தின்போது நித்தியா கோல் எய்துவதை காணலாம்.



*கேள்வி:* பிற தேசங்களோடு ஒப்பிடுகையில யாழ். குடாநாட்டு விளையாட்டு மைதானங்கள் உங்களுக்கு எத்தகைய அனுபவங்களைத் தந்தன?

*பதில்:* குடாநாட்டில் விளையாட்டுத்துறை வளர்க்கப்படவேண்டும். அதற்கமைய சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படவேண்டும்.

எமது விளையாட்டு மைதானம் போதிய வசதிகள் இன்றிக் காணப்படுகிறது. கரடு முரடான புற்றரைகளில் பயிற்சிகளை மேற்கொண்ட எமக்கு மகரகம போன்ற மைதானங்கள் புதிய அனுபவங்களைத் தந்தன. இத்தகைய நவீன வசதிகள் கொண்ட மைதானங்களை அமைத்து விளையாட்டுத்துறையை வளர்க்க வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவனசெய்யவேண்டும்.

*கேள்வி:* விளையாட்டுத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்?

*பதில்:* தமிழ் விளையாட்டு வீரர்களுக்கு அறிவியல் ரீதியான நுணுக்க அறிவு உண்டு. ஆனால், அதனைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. விளையாட்டு அல்லது படிப்பு இரண்டிலும் ஈடுபடுபவர்கள் மிகக் குறைவு. ஏதோ ஒன்றில்தான் அதிக நாட்டம் காட்டுகின்றனர். இதற்குப் பெற்றோரும் ஊக்கம் கொடுப்பதில்லை. வெளிமாவட்டங்களில் குறிப்பாகச் சிங்களப் பெற்றோர் தமது பிள்ளைகளின படிப்பில் மட்டும் ஆர்வம் காட்டுவதில்லை. விளையாட்டுக்கான பயிற்சிக்காகக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டு காத்திருந்து கூட்டிச் செல்கிறார்கள். அதேபோல எமது பெற்றோர், தடையில்லாமல், படிப்பு, விளையாட்டு இரண்டிலும் ஈடுபட ஊக்கம் கொடுக்க வேண்டும். இதனால் விளையாட்டுத்துறையில் மிகச் சிறப்பாக எமது தமிழ்ச் சகோதரர்கள் பிரகாசிக்கலாம்.

*கேள்வி:* உங்களின் எதிர்காலத் திட்டம் என்ன?

*பதில்:* விளையாட்டுத் துறையில் சாதனைகள் பல படைக்கவேண்டும். தமிழீழத் தேசிய அணியில் இடம்பெற்றுள்ள நான் சிரேஷ்ட அணிக்குள் உள்வாங்கப்பட வேண்டும். சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் தமிழுக்கும் தேசியத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

வீர, வீராங்கனைகள் உருவாக என்னாலான உதவிகளைச் செய்வேன்.

**சந்திப்பு:- தயா, சாயினி**

*கேள்வி:* தேசிய வலைப்பந்தாட்ட அணிக்கு முதன் முறையாக நீங்கள் மட்டுமா தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள்?

*பதில்:* இல்லை, தேசிய வலைப்பந்தாட்ட அணிக்கு எனக்கு முன் பலர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சிரேஷ்ட அணிக்கு 1998இல் ரி.சந்திரமதி, வி.அனுஷா, எஸ்.காஞ்சனா ஆகியோரும் 1999இல் கனிஷ்ட பிரிவில் சி.அஜந்தா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டபோதும் கல்வியை தொடர்வதற்காகவும் நாட்டுச் சூழ்நிலை காரணமாகவும் விலகிவிட்டார்கள்.

2001ஆம் ஆண்டு கனிஷ்ட பிரிவில் சோ. ஜெயந்தியும் 2004ஆம் ஆண்டு நானும் தெரிவு செய்யப்பட்டுள்ளோம். ★



கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் கரும்புலி மாவீரர் நினைவு ஊர்திப் பவனி கடந்தவாரம் வன்னிப் பிரதேசம் எங்கும் பவனி வந்தது.

தேரவில் மட்டு.- அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் ஊர்தி தரித்து நின்றவேளை அங்கு பொதுமக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

# கோப்பாய் சிவம் எழுதிய சமய நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை6

கோப்பாய் சிவம் எழுதிய 'அருள் வழங்கும் மாரியம்மன்', 'இதுதான் இந்து மதம்' ஆகிய இரு நூல்களினதும் வெளியீட்டு விழா எதிர்வரும் ஒன்பதாம் திகதி காலை 10 மணிக்கு தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

சந்நிதியின் சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் இந்த விழா, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ வ.குமாரசாமி ஐயர் நூலின் அறிமுகவுரையினையும் இந்து கலாசாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் நூலின் வெளியீட்டுரையினையும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் நூலின் ஆய்வுரையினையும் நிகழ்த்துவர்.

நூலின் முதற்பிரதியை பண்டத்தரிப்பு பிரானபற்று முத்துமாரியம்மன் கோவில் தர்மகர்த்தா நல்லையா செல்வராசா பெற்றுக்கொள்வார். (எ-6)

# செஞ்சிலுவைக் குழுவினருடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூலை6

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை அருகிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் காரியாலயத்துடன் அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:

சொ.பேரம்பலம் (வட்டக்கச்சி), சு.ராஜேஸ்வரி (ஸ்கந்தபுரம்), ஜோ.முனீஸ்வரி (கிளிநொச்சி), க.தனபாக்கியம் (கிளிநொச்சி), த.அஜந்தன் (பரந்தன்), சி.கமலா (ஸ்கந்தபுரம்), வீ.மகேஸ்வரி (அக்கராயன்), ம.விஜயராணி), ந.சாந்தி (அக்கராயன்) ,வ.பரமேஸ்வரி (கிளிநொச்சி) -

செ.மனோகரன் (உருத்திரபுரம்), ஆ.சுரேஸ் (புத்துவெட்டுவான்), க.ஜெயலட்சுமி (கிளிநொச்சி), க.லலிதாதேவி (மல்லாவி), த.புஸ்பலாதா (பள்ளமடு), த.சாந்தராணி (அக்கராயன்), க.சிங்கனி (சத்திரசோலை), ம.பகீரதி (கிளிநொச்சி), க.சிவமோகன் (அக்கராயன்), வசந்தகுமாரி (கிளிநொச்சி) -

மரிய சூசைநாதன் (வட்டக்கச்சி), சி.சந்திரன் (அக்கராயன்), த.சரோஜா (அக்கராயன்), செ.லட்சுமி (கிளிநொச்சி), சுகுமார் (வட்டக்கச்சி), செல்வராசா (வட்டக்கச்சி), மு.மரியம்மா (ஸ்கந்தபுரம்), ஜோ.வசந்தி அன்டனியம்மா (ஸ்கந்தபுரம்), க.மனோகரன் (கல்விளான்) ர.திருமணி (தட்சணா மருதமடு) (4-ரி)

# இன்று கௌரவிப்புப் பெறுகின்ற ஐந்து மூத்த பத்திரிகையாளர்கள்

கொழும்பு,ஜூலை.6

பத்திரிகைத் துறையில் நீண்ட காலம் மேன்மையான சேவை புரிந்துள்ள 5மூத்த பத்திரிகையாளர்கள் இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் அவையினால் இவ்வருடம் விருது வழங்கி கௌரவிக்கப் படவிருக்கின்றனர். இந்த ஐவரில் தமிழ் வாசகர்களுக்கு மிகவும் பரிட்சயமான டி.எம்.முருகையாவும் ஒருவர்.

இலங்கையில் மூத்த அரசியல் கேலிச் சித்திர ஓவியரான விஜயருபகே ஆர். விஜயசோம, புகைப்படப்பிடிப்பாளர் லொக்கு கே. எட்மன்ட் சமரரட்ன, பல்துறைப்பத்திரிகையாளன் கங்கொட கே எல்மோ மெல்வில் கிறிஸ்டோபர் குணரட்ன, லேக்ஹவுஸ் நிறுவனத்திலும் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கைச் செய்தியாளராக விளங்கிய சுகத்ததாச பத்திரவிதான ஆகியோர் கௌரவிக்கப்படும் ஏனைய பத்திரிகையாளராவர்.

டி.எம்.முருகையா அறுபதுகளில் ஈழநாடு பத்திரிகையில் பணிபுரிந்தவர். வெளிநாட்டுச் செய்திகளைத் தயாரிப்பதில் மட்டுமன்றி வெளிநாட்டுச் செய்தி விமர்சனங்களில் கைதேர்ந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். நாட்டில் 12பத்திரிகைகளில் அவர் பணி புரிந்துள்ளார்.

சுதந்திரன், தினகரன், வீரகேசரி, ஈழநாடு, தினபதி, சிந்தாமணி, டைம்ஸ் ஒப் சிலோன் மற்றும் சுமதி ஆகிய பத்திரிகைகளில் அவர் பணியாற்றி உள்ளார். பல பத்திரிகைகளில் ஆசிரிய தலையங்கம் எழுதுபவராகவும் நாடாளுமன்றச் செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார்.

டி.எம்.முருகையா தற்பொழுது பதுளையில் தமது குடும்பத்தினருடன் வசித்து வருகின்றார்.

மவுன்ட்லெவினியா ஹோட்டலில் இன்று நடைபெறவிருக்கும் வைபவத்தில் இந்த 5மூத்த பத்திரிகையாளர்களுடன் தற்போது முனைபுடன் செயல்பட்டுவரும் பத்திரிகையாளர்கள் பலரும் தகுதியின் அடிப்படையில் கௌரவிக்கப்பட விருக்கின்றனர். (ப)

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்,ஜூலை6

ஜே/80 பெரிய கடை கிராம அலுவலர் பிரிவில் வசிப்பவர்களின் அபிவிருத்திக்கான தரவு சேகரித்தலும் பங்கீட்டு அட்டை மீளாய்வும் இன்று காலை 8.30 மணிமுதல் யாழ்.கன்னாதிட்டியில் உள்ள சயன்ஸ் ஹோலில் நடைபெறவுள்ளன. (எ)

# மாகாணத் தமிழ் இலக்கிய விழா ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை6

வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்படும் தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணத்தின் கலை பண்பாட்டு விழுமியங்களை அத்தாட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விழாவில் நாடகம், நாடடுக்கூத்து, நடனம், கருத்தரங்கு, நூல் வெளியீடு, ஆளுநர் விருது வழங்கல், இலக்கிய நூற்பரிசு வழங்குதல் என்பன விஷேட நிகழ்வுகளாக இடம்பெறும்.

மேற்படி விழாவில் முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவித்துள்ளார். (எ)

# இந்திய இலகுகடன் திட்ட நிதி பல்கலைக்கழகங்களுக்கு இல்லை

## மானிய ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை6

இந்திய இலகுகடன் வழங்கும் திட்டத்தின் கீழ் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படவிருந்த நிதி உதவி நிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழங்களுக்குத் தேவையான கல்விசார் உகரணங கள் மற்றும் வாகனங்கள் கொள்வனவு செய்ய இந்திய இலகு கடன் திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படவிருந்தது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களுக்கும் 3 கோடி ரூபா வழங்கவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந்த உதவியைப் பெறுவதற்காக பல்கலைக்கழகங்கள் விவர அறிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தன.

தற்சமயம் இந்த நிதி உதவி நிறுத்தப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிதி உதவி நிறுத்தப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. (8-3)


## MEDIATION PROCESS

This is to inform that S.J. Selvarajah J.P., Business Development Officer, Chamber of Commerce and Industries of Yarlpanam, has trained and accredited as a Mediator, by the (C.M.C) Ministry of Justice, under the section 12 of the C.M.C of Sri Lanka, Act No 44 of 2000.

Dispute among the Commercial Organization, Industrial organization, Co-Operative and Public organization and also the individual Dispute may initiate under the Mediation process by submitting a written request. For More details contact below address

S.J.Selvarajah J.P
Mediator (C.M.C) Ministry of Justice
C/o C.C.I.Y
17, Agrarian service lane
Nallur - Jaffna.
(C-36228)

## பணிநிலை வேண்டுகை

★ மாவட்ட அலகுப் பொறுப்பாளர்
★ ஆராய்ச்சி உத்தியோகத்தர் (களநிலை)

ஆகிய பணிநிலைகளுக்கான (04-07-04) பக்கம் 14 இல் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம்) நேர்முகத் தேர்வுகள் ஜூலை 8 ஆம் திகதி (8-7-2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை கீழ்க்கண்ட முகவரியில் நடைபெறும்.

தொடர்பு:
தகவல் முகாமையாளர், வர்த்தக தொழில்துறை மன்றம் யாழ்ப்பாணம், 17, விவசாய சேவை நிலைய வீதி முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-36225)

## இரவு மேற்பார்வையாளர்கள்

பத்திரிகை நிறுவனத்தில் இரவில் இயங்கும் பிரிவுகளின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும், ஒன்றிணைத்து விரைவுபடுத்துவதற்கும் முன் அனுபவமும் கல்வித்தகுதியும் உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள், நிறைந்த உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், பணியாளர்களை நிர்வகிக்கும் திறமை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அச்சு இயந்திரங்கள் தொடர்பான ஓரளவு அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

யாழ். மாநகரசபைப்பகுதிக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் 07.07.2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். (சீ-35899)

உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்போடும் பண்போடும் எமை
வளர்த்து,
சீரோடும் சிறப்போடும் வாழ
வைத்து
பேரோடும் புகழோடும் பூவுலகை
நீத்து
விண்ணுலகம் நோக்கிச் சென்ற
தந்தையே!

உங்கள் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாகலிங்கம் சிவலிங்கம்

தோற்றம் 15.03.1950 மறைவு 18.07.2003

மனைவி :- ராதாராணி
பிள்ளைகள் :-
சுரேஸ்குமார், றஞ்சித்குமார், விஜயகுமார்,வினேத், ராஜ்குமார்

தில்லையம்பதி. உரும்பிராய்.

# ஆஸி. அணியுடனான முதல் டெஸ்டில் இலங்கை அணிக்குத் தோல்வி!

சிட்னி,ஜுலை6

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கிடையே ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும டெஸ்ட் தொடரின் முதற்போட்டியில் ஆஸ்திரேலிய அணி 149 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணியின் சார்பில் டெரன் லீமன் 57 ஓட்டங்களையும் டேமியன்மாட்டின் 47 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் சார்பில் சமிந்தவாஸ் 31 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 97 ஓட்டங்களுகளுள் சுருண்டது. அணியின் சார்பில் தில்ஷான் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ஆஸ்திரேலிய அணியின் சார்பில் கிளென்மக்ராத் 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் ஷேன்வோன் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது. அணியின் சார்பில் அடம்கில்கிறிஸ்ட் 80 ஓட்டங்களையும் டெரன் லீமன் 51 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் சார்பில் எல். மலிந்த 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதனையடுத்து 312 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியுற்றது. அணியின் சார்பில் மஹேல ஜயவர்த்தன 44 ஓட்டங்களையும் திலான் சமரவீர 32 ஓட்டங்களையும் பெற்றனர். ஆஸ்திரேலிய அணியின சார்பில் மைக்கல் கஸ்பரோவிச் 39 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக கிளென் மக்ராத் தெரிவுசெய்யப்பட்டார். இதன் மூலம் 5 நாள்கள் கொண்ட டெஸ்ட் போட்டி 3 நாள்களில் முடிவுற்றது.(10)





இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் எல். பாலாஜியும், சகலதுறை ஆட்டக்காரர் ஹேமங் பதானியும் அண்மையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலதாவைச் சந்தித்த பின்னர் அவருடன் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம்.

# அஸ்ராக் கிண்ணக் கிரிக்கெட்டில் யூனியன் கல்லூரி 2 சதங்கள் பெற்றது

வலி.வடக்கு,ஜுலை6

அஸ்ரா வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 16 வயத்திற்கு உட்பட்டோருக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில தெல்லிப்பழை யூனியன் கல்லூரி இரண்டாவது . சதத்தைப் பெற்றுள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வீரரான க.பென்ஜோய ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையே இடம் பெற்ற போட்டியில் இச்சதம் பெறப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 80 ஓவர்கள் விளையாடி 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 306 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

க.பென்ஜோய் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும் சி.கபில்ராஜ் 73 ஓட்டங்களையும் ரா.டக்ஸ்சாஜன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.நிதர்சன் ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 7 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் எஸ்.கஜன் 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் எஸ்.வல்லவகுமார் 21 ஓவர்கள் பந்து வீசி 101 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில இந்துக் கல்லூரி அணி 36 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நேரம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வி.விசோகா 54 ஓட்டங்களையும், ரி.செந்தூரன் 20 ஓட்டங்களையும் இ.வாகீஸ் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் யூனியன் கல்லூரி வீரர்களான ஆர்.டக்சாயன் 10 ஓவர்களில் 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆர்.பிரணவரூபன் 7 ஓவர்களுக்கு ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு 2 விகெட்டுக்களையும் ஆர்.டர்சன் 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஏற்கனவே, இப்பாடசாலையைச் சேர்ந்த ஆர்.டக்சலன் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலத்துக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(10-86)

## விளையாட்டு

19 வயதுக்குட்பட்ட

# தேசிய அணித் தெரிவுப் போட்டிக்கு யாழ். மாவட்ட வீரர்கள் ஏழு பேர்

19 வயதுக்குட்பட்ட தேசிய கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்வதற்கான மாகாணமட்டக் கிரிக்கெட் போட்டிகள் இன்றும் நாளையும் மொறட்டுவை பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.



தெரிவு அணியில் இடம்பெற்றுள்ள யாழ். மாவட்ட வீரர்களுடன் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்க நடைமுறைப் பயிற்றுனர் ஏ.எஸ்.நிலாந்தனும் படத்தில் காணப்படுகின்றார்.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 7 வீரர்களும் வவுனியா மாவட்டத்தில் இருந்து 4 வீரர்களும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 2 வீரர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 2 வீரர்களும் மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் 16 வீரர்களின் பெயர்கள் வருமாறு:-

வி.ரஜீவ்குமார் (யாழ்.), ஆர்.வினோதன் (யாழ்.), ஜி.செல்வன்லொயிட் (யாழ்.), சி.மதூசன் (யாழ்.), கே.றொகான் (யாழ்.), எம்.மயூரன் (யாழ்.), சி.ஜங்கரன் (யாழ்.), ரி.செந்தூரன் (திருமலை), பி.திலகேசன் (திருமலை).

ஜே.கே.ராஜன்டினாகரன் (மட்டக்களப்பு), எல்.வள்ளுவன் (மட்டக்களப்பு), டி.கெங்காதரன் (வவுனியா), எஸ்.வினோத்குமார் (வவுனியா), எஸ்.நிமலேஸ்வரன் (வவுனியா), வி.மிதுனன் (வவுனியா), எஸ்.எட்வேட்குலாஸ் (மன்னார்).

போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள யாழ். மாவட்ட வீரர்கள் நேற்றுமுன்தினம் புறப்பட்டுச் சென்றனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் மேற்கொண்டுளளது. (10)

# தடகளப் போட்டியில் பிலிப்நேரியார் வி.க.சம்பியன்

வடமராட்சி,ஜுலை6

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட தடகளப்போட்டியில் செம்பியனபற்று வடக்கு, பிலிப் நேரியார விளையாட்டுக் கழகம முதலாமிடத்தைப் பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும், ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

சிறந்த சுவட்டு வீரராக வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சி.சிவனேசனும் சிறந்த சுவட்டு வீராங்கனையாக செம்பியன்பற்று வடக்கு பிலிப் நேரியார் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ம.ஜேசுராணியும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சிறந்த கள விளையாட்டு வீரராக ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.மனோகரனும், சிறந்த கள விளையாட்டு வீராங்கனையாக கொக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.சுகந்தினியும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (10-182)

ஐரோப்பியக் கிண்ணப் போட்டியில்

# முதற் தடவையாகச் சம்பியனாகி கிறீஸ் வரலாற்றுச் சாதனை

லிஸ்பன்,ஜுலை6

ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கிறீஸ 1-0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கலை வீழ்த்தி முதல்முறையாகச் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.




16 முன்னணி அணிகள பங்கேற்ற ஐரோப்பியக் காற்பந்துப் போட்டி போர்த்துக்கல்லில் நடந்தது. கடந்த 12 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வந்த இந்தப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நடந்தது. இதில் முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்த அணிகளான போர்த்துக்கல்லும், கிறீஸும் மோதின. போட்டியைக் காண இருநாட்டுப் பிரதமர்களும் மைதானத்திறகு வந்திருந்தனர்.

லீக் ஆட்டத்தில் ஏற்கனவே கிறீஸ் வென்று இருந்ததால் புத்துணர்ச்சியுடன் அந்த அணி களம் இறங்கியது. அதேபோல போர்த்துக்கல் அணியும் சொந்த மண்ணில் ஆடியதால் உள்ளூர் ரசிகர்களின் பலத்த ஆதரவுடன் களம்புகுந்தது.

பலத்த ஆரவாரத்துடன் தொடங்கிய இந்தப் போட்டியின் தொடக்கம் முதலே போர்த்துக்கல் அணி ஆதிக்கம் செலுத்தி ஆடியது. போர்த்துக்கல் வீரர்கள் 14 மற்றும் 17 ஆவது நிமிடங்களில் கோல் கம்பத்தை நோக்கி அடித்த பந்தை கிறீஸ் அணியின் கோல் கீப்பர் தடுத்து நிறுத்தினார். இது மட்டுமல்லாமல் அந்த அணியினருக்கு மேலும் கோல் அடிக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், அதிஷ்டம் கைகூடவில்லை. முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியதும கிறீஸ் அணி சுதாகரித்துக் கொண்டு ஆடியது. இதன் பயனாக ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் கிறீஸ் முதற்கோலை அடித்தது. அந்த அணியின் வீரர் சாரிஸ்டீஸ் இந்தக் கோலை அடித்துக் கிறீஸை முன்னிலை பெறச் செய்தார்.


கிறீஸ் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து போர்த்துக்கல் அணி ஆக்ரோஷமாக ஆடியது. இதனால், அந்த அணியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே பெரும்பாலும் பந்து இருந்தது. போர்த்துக்கல் அணியினர் கோல் கம்பத்தை நோக்கிப் பலமுறை படையெடுத்தும் பலன் கிடைக்கவில்லை. போர்த்துக்கல் அணியினரின் கோல் அடிக்கும் வாய்ப்பை கிறீஸ கோல் கீப்பர் பலமுறை தடுத்து நிறுத்தினார். மேலும் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்காததால் கிறீஸ் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் பட்டத்தை முதன் முறையாக வென்றது. (10)

# விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் ஷரபோவா, ரோஜர்பெடரர் சம்பியன்கள்

லண்டன்,ஜுலை6

விம்பிள்டன் டெனிஸ் பெண்கள் ஒற்றையர் சம்பியன் பட்டத்தை ரஷ்யாவின் ஷரபோவா வென்றுள்ளார். கடந்த சனிக்கிழமை நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், இளம் வீராங்கனையான ரஷ்யாவின் ஷரபோவாவை எதிர்த்து விளையாடினார். இந்தப் போட்டியில் ஷரபோவா 6-1, 6-4 என்ற செட்களில் செரீனாவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஷரபோவா சம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதன்முறை.

இந்த வெற்றியின் மூலம் ஷரபோவா, தரவரிசைப் பட்டியலில் 13ஆவது இடத்தில் இருந்து 9ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளார். தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் இவர் இடம் பிடிப்பது இதுவே முதல்முறை. ஆனாலும், ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஷரபோவாவிற்கு கிடைக்கவில்லை. உலக தரவரிசைப் பட்டியலில் முன்னேறினாலும், ரஷ்யாவின் ஆறாவது வீராங்கனையாக உள்ளார் ஷரபோவா. மிஸ்கினா, எலினா, டெமன டிவா உட்பட முதல் ஐந்து வீராங்கனைகள் ரஷ்யாவின் சார்பில் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ளனர்.



ஆண்கள் பிரிவில் சுவிஸ்சர்லாந்தின் ரோஜர் பெரெடர் அமெரிக்காவின் அண்டி ரொடிக்கை 4-6, 7-5, 7-3, 6-4 என்ற செட்களில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். (10)

## சமயசந்நிதிகளில

அல்வாய்கிழக்கு, மா... ராஜ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெரும் திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த் திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-ரி)

★ ★ ★

சரசாலை மகிழ்நின்ற வளவு இராமாவில் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (10-117)

★ ★ ★

பொன்னாலை நரசிங்கபைரவர் (ஆதிவைரவ சுவாமி) ஆலய கும்பாபிஷேகம் நாளைமறு தினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (10-15)

★ ★ ★

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெரு விழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு திரு விழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (10-30)

# கரும்புலிகள் தினத்தையொட்டிய இலக்கியப் போட்டிப் பரிசளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை6

கரும்புலிகள் நாளையொட்டி நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.தமிழீழ மாணவப் பேரவையில் நடைபெறறது.

தமிழீழ மாணவப் பேரவையின் தலைவர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ், கலைப பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர், சமூகவியற் துறைத் தலைவர் பேராசிரியர் ப.சண்முகலிங்கம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஈகச்சுடரினை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கே.ரி கணேசலிங்கம் ஏற்றிவைத்தார்.

கரும்புலிகளின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை கரும்புலி லெப்டினன்ட் மாறனின் சகோதரன் புவிராஜ் அணிவித்தார். தொடர்ந்து மலரஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

கரும்புலிகள் நாள் நிகழ்வையொட்டி நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள், விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆகியோா கலந்துகொண்டனர். (ஒ-6)



கரும்புலிகள் நாளையொட்டி நடத்தபபட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும நிகழ்வு யாழ். தமிழீழ மாணவப பேரவையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி தேசியக்கொடி ஏற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் வெற்றி பெற்றவர்களில் ஒருவருக்குப் பரிசல்கள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## பாடசாலை மட்டப் போட்டிகள்

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளிடையேயான விளையாட்டுப் போட்டிகள் இன்று வவுனியாவில ஆரம்பமாகின்றன.

இதில் உடற்பயிற்சிப் போட்டிகள வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. இறுதிப் போட்டி பிற்பகல் 1.30 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் விராசையா தலைமையில் நடைபெறுகின்றது. பரிசளிப்பு நிகழ்வு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தலைமையில் இடம்பெறும். திருமதி விசாகலிங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். இப்போட்டியில் 20 அணிகளுக்கு மேல் பங்குபற்றுகின்றன.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 22 ~ 07 ~ 1971 |  | 06 ~ 07 ~ 2002 |

### அமரர் நவரட்ணராஜா ரவிசங்கர்

*(மருத்துவ மாணவன்)*

நண்பா, உன் இன்முக சிரிப்பும் நடையும்
நீ எம்முடன் இருப்பது போன்றுள்ளது
ஆனால் நீ எம்மை விட்டகன்று ஈராண்டுகள்
கரைந்து விட்டன. கனவுபோல் உள்ளது
நனவு என்பதை மனது ஏற்க மறுக்கிறது

உன் பிரிவை நம்ப முடியாத:
மருத்துவ நண்பர்கள் (17ஆம் அணி)

(33838)(43-32-13-16)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் சிவப்பிரகாசம்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல.6, இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவப்பிரகாசம் அவர்கள் சுவிஸ்சர்லாந்தில் (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - செல்வி தம்பதிகளின் அன்பு மகனும் மொனிக்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராயப்பு - செலஸ்றீனா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் அன்ரன்ராஜு (சுவிஸ்), விஜயரகு (லண்டன்), ஜோன்சன் கெனடி (சுவிஸ்), சுரேஸ் றெஜினோல்ட் (சுவிஸ்), ஜோய்மைக்பேட் (லண்டன்), கெலன் சோபியா (லண்டன்), சதீஸ்வரன் (கொழும்பு), தயாநிதி (பெறாமகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தையா, அமரர் செல்லத்துரை, அழகரட்ணம், இராசம்மா, பொன்னம்மா, புஸ்பராணி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அந்தோனிப்பிள்ளை, தேவதாஸ், கந்தையா (பிரான்ஸ்), பாக்கியம், காலஞ்சென்ற மாணிக்கம், இராசன், மேரி, வபா, துரைரட்ணம், காலஞ்சென்றவர்களான பெர்னபேத்தம்மா, பிறிசித்தம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நிலானி (சுவிஸ்), வலன்ரீனா (லண்டன்), கிரிதா (சுவிஸ்), துஷாதி (சுவிஸ்), றெக்ஸ் (லண்டன்), நீல் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் றுக்சினி (சுவிஸ்), ஜெலுசியா (சுவிஸ்), சபிநாத் (சுவிஸ்), நெவின் (லண்டன்), திவின்சியா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சதீஸ்வரன் (மகன்)
(79/1 5/11, ஜம்பட்டாவீதி, கொழும்பு-13)
T.P.0776051027
சி.ராஜன் (மகன் - சுவிஸ்)
**T.P.**0323846473 (சுவிஸ்), 0786742238 (சுவ...)

(32-13-16-40) (...226)

### திருமதி இரத்தினசபாபதி சரஸ்வதி

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினசபாபதி சரஸ்வதி அவர்கள் நேற்று (05-07-2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - அ... பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் இரத்தினசபாபதி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் நவரட்ணம் ஆகியோரின் சகோதரியும் வரதராஜா, தவராஜா (கனடா), காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் பாலராசா (J.B.R. பிக்ஸர் பலஸ், கல்வியங்காடு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவநாயகி, சிவஞானசுந்தரி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷாந்தன், சாயிதர்சனா, முரளிராஜ், பகலவன், தர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-07-2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*சைவப் பாடசாலை ஒழுங்கை,*
*திருநெல்வேலி வடக்கு.*

தகவல்:
இ.பாலராசா (மகன்)
*J.B.R. பிக்சர் பலஸ், கல்வியங்காடு*

(32-13-16) (33835)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் விவரப்படி கட்டட வேலைக்கு M7 உம் ஏனைய வேலைகளுக்கு M9 உம் ICTAD பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் படிவம் பெறல் | - 12.07.2004 ந.ப. 12.00 மணிவரை |
| கேள்விப் படிவம் ஏற்றல் | - 16.07.2004 ந.ப. 12.00 மணிவரை |
| கேள்விகள் திறத்தல் | - 16.07.2004 பி.ப. 02.00 மணிக்கு |

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விவைப்பு | கேள்விப்பத்திர கட்டணம் வற்வரியுடன் |
|---|---|---|
| 01. சங்கானை உப அலுவலக திருத்தம் | 5000.00 | 1150.00 |
| 02. தலைமையலுவலக களஞ்சிய அறை வாகனத் தரிப்பிடம் புனரமைத்தல் | 4000.00 | 575.00 |
| 03. முதலிகோயிலடி நீர் விநியோகத்திட்ட அணைக்கட்டு அமைத்தல் | 2000.00 | 345.00 |
| 04. வண்ணர் ஒழுங்கை திருத்தம், அராலி | 5000.00 | 1150.00 |
| 05. கம்மாலை ஒழுங்கை திருத்தம், சுழிபுரம் | 4000.00 | 575.00 |
| 06. சங்கானை பட்டினசபை வீதி திருத்தம் | 5000.00 | 1150.00 |

மேற்படி கேள்விப்பத்திரத்தின் மறுபிரதியை பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*வலிகாமம் மேற்கு பிரதேச சபை,*
*தலைமையலுவலகம்,*
*சுழிபுரம்.*
*01.07.2004*

(32-13-16-33) (சி-36230)

**திருமதி பு.சிவலிங்கம்**
செயலாளர்


HATTON NATIONAL BANK LIMITED
HNB
H.N.B

தமிழீழ விளையாட்டுத்துறை நடத்திய முதலாவது தமிழீழ இளையோர் தேசிய தடகள போட்டிகளுக்கு அனுசரணையும் ஆதரவும் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்
(C/36231)

உதயன்
எரிபொருள்
விற்பனை நிலையம்
சண்டிலிப்பாய்

# பாடசாலைகளில் முகாமைத்துவக் குழுக்கள் அமைப்பு

ஊர்காவற்றுறை, ஜூலை6

ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட பாடசாலைகளில் உலக உணவுத்திட்டதத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள மாணவா களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்தினை செயற்படுத்தும் முகமாக மேற்படி பாடசாலைகளில் முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த முகாமைத்துவக் குழுவில் பழைய மாணவா சங்கப பிரதிநிதி, பெற்றோர்கள், ஆசிரியர்சங்கப் பிரதிநிதி மற்றும் அப்பகுதி கிராமசேவை அலுவலர், பொதுசுகாதாரப்பரிசோதகர், சமுர்த்தி உத்தியோகத்தர், மாணவர் பிரதிநிதி ஆகியோர் இடம்பெறுவர்.

இவர்கள் அந்தந்தப் பாடசாலையில் மதிய உணவு தயாரிப்பதைப் பார்வையிட்டு அங்குள்ள முறைப்பாட்டுப் புத்தகத்தில் தமது பதி வினை மேற்கொள்வர். இலைக்கஞ்சி, மஞ்சள்சோறு, புளியோதரை, உப்புமா, புளிச்சாதம் போன்ற பல்வேறு உணவுவகைகள் மாணவா களுக்கு மதியஉணவாக தயாரித்து வழங்கப்படவுள்ளன.

இதற்கான உலர் உணவுப் பொருள்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று பாடசாலை அதிபர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-16)


## சீட்டிழுப்பு முடிவுகள்

போஃர்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்திய மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | இல. |
|---|---|
| 1 ஆம் பரிசு | 3664 |
| 2 ஆம் பரிசு | 2669 |
| 3 ஆம் பரிசு | 1258 |

ஆறுதல் பரிசுகள் : 2570, 1484, 3110, 1348, 3894

மேற்படி பரிசுகளை உரியவர்கள் 20.07.2004 இற்கு முன்னர் கழக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

25/1, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (33839)(36-12-17) - நிர்வாகம்.


## அந்தியேட்டி அழைப்பு

இவ்வுலகில் 11 - 09 - 1936



அவ்வுலகில் 06 - 06 - 2004

### அமரர் சின்னையா இரத்தினம்

**06.06.2004 அன்று காலமான எமது குடும்பத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*இல.54, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(33843)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி சிவபாக்கியம்

நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாக்கியம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் தங்கையும் மனோன்மணி, காலஞ்சென்ற நவரட்ணராஜா (V.C.), மகேந்திரராஜா, இன்பரட்ணம், சிவஞானராஜா அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கைலேஸ்வரன் மற்றும் சறோஜினிதேவி, யோகேஸ்வரி, மங்கயற்கரசி, ஜசிந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகேந்திரராஜா,
இன்பரட்ணம்
(பிள்ளைகள்).

*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (33848)(36-12-17)

### திருமதி அருச்சுனன் மகேஸ்வரி

பொன்னம்பலம் வீதி, ஆலடி காரைநகரைப் பிறப்பிடமாகக கொண்ட திருமதி அருச்சுனன் மகேஸ்வரி நேற்று (05.07.2004) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் அருச்சுனனின் அன்பு மனைவியும் ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் நடராசாவின் சகோதரியும் சோமசுந்தரம், சண்முகநாதன், சாரதாதேவி, மற்றும் காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் புவனேஸ்வரியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சாம்பரோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அ.சண்முகநாதன்
(மகன்).

*ஆலடி,*
*காரைநகர்.* (33848)(36-12-17)

# முன்பள்ளி விளையாட்டுப்போட்டி

ஊர்காவற்றுறை,ஜூலை6

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முன்பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் ஊர்காவற்றுறை, அனலை தீவு, நெடுந்தீவு உப அலுவலக முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான போட்டிகள் இன்று காலை 9.00 மணிக்கு ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்திலும் -

நாரந்தனை உப அலுவலக எல்லைக் குட்பட்ட முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான போட்டிகள் நாளை காலை 9 மணிக்கு தம்பாட்டு பொது விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன.(ஒ-16)

# சீருடைத்துணியை மீளப்பெற நடவடிக்கை

தென்மராட்சி,ஜூலை6

இதுவரை விநியோகிக்கப்படாத இலவச சீருடைத் துணிகளை நாளை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கிராம அலுவலர்களுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

பிரதேச மாணவர்களுக்கு வழங்கவென கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்ட இலவச சீருடைத்துணிகளையே மீள ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சீருடைத்துணிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பல தடவைகள் அறிவித்தும் பல பெற்றோர்கள் இன்னமும் அவற்றினைப் பெறுவதில் அக்கறை செலுத்தாததால் அவற்றை மீளப் பெற முடிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# அந்தோனியார் கல்லூரி பரிசுத் தினம்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் நாளை காலை 10 மணிக்கு கல்லூரி அதிபர் ஜே.எ.ஜேசுதாஸ் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் பி.ஞானப்பிரகாசம் கலந்துகொள்வார். (ஒ-16)


**கிறிஸ்ரல் சென்ரர்** நெல்லியடி
**English Class** புதிய பிரிவு II (42)
ஆரம்பம்: 07-07-2004
பிற்பகல் 3.30 மணி
By.சடகோபன்
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
(சி-36229)

**ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை**
மாதிரி வினாத்தாள் வகுப்புகள்
ஆசிரியர்:
த.தவசேகர் B.Sc., P.G.Dip.in Ed.
புதன், வெள்ளி : 4 - 6 (S.L.T)
ஆரம்பம்: 07/07/2004 4-6 (S.L.T)
SCIENCE HALL,
கன்னாதிட்டி
(33840)(36)

**லஷ்சுமி** இணுவில்



விஜய், சாலினி, தாமு, தலைவாசல்விஜய், வையாபுரி நடிப்பில்
தினசரி: 11.00, 3.00 700 (பு.நே.)
கண்ணுக்குள் நிலவு
(33807) (43)

**ராஜா** யாழ்ப்பாணம்



சூர்யா ,ஜோதிகா, (இருவேடம்) விவேக் நடித்த
(ரீல்ஸ்)
பேரழகன்
தினசரி: 10.30 2.30 6.30 9.30 (பு.நே.)
(C/35994)(29)

**நாகம்ஸ்** சுன்னாகம்



மாதவன். அமோகா. பூஜா. தாமு நடித்த
ஜே ஜே
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/35739) (36)

**நிறஞ்சனாஸ்** சங்கானை



விஜய், திரிஷா பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
வெள்ளி, சனி, ஞாயிறு
EXTREMTIES (இரவு 8.45)
தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
(C-35653)(29)


## மரண அறிவித்தல்கள்

### யோசேவ் மரியதாசன்

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் -தென்மூலை அச்சுவேலி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் யோசேவ் மரியதாசன் நேற்றுமுன்தினம் (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலியில் காலமானார்.

அன்னார் நீற்றாவின் அன்புக் கணவரும மேரிதிரேசாவின் அன்புச் சகோதரரும் றெஜினோலட் (சவூதி), மேரி ஜக்குலின் (ஆசிரியை திருக்குடும்பக் கன்னியர் மடம், மன்னார்), மேரி மக்டலின் (யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்), மேரி இமக்குலேற் (ஜீலான் மத்திய கல்லூரி, பாணந்துறை) ஆகியோரின் அன்புத தகப்பனாரும் திருமதி ராஜி ரெஜினோல்ட், (கம்சா முஸ்லிம் வித்தியாலயம் கொழும்பு), அகஸ்ரஸ் கஸ்மீர் சந்திரய்யா (பிரதேசசெயலாளர், முசலி, மன்னார்), காலஞ்சென்ற பிலிப் தம்பிராஜா (சில்லாலை), சலேசியஸ் ராஜ்குமார் (சுடர்ஒளி, கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் நீக்லஸ் ஜோர்ச் இன் மைததுனரும் கமறன், வின்ஸ்ரன், மியூரியன், சாளினி, பற்றசன், துஷானி, துமேஷ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆதமசாந்திக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யபபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தென்மூலை,*
*அச்சுவேலி.*
(33847)(36-12-17)

தகவல்:
மேரி மக்டலின்பிலிப்
(மகள்).

### திருமதி சுப்பையா அன்னலச்சுமி

(உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)



யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு கலைமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா அன்னலச்சுமி அவர்கள் (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா (ஓய்வுபெற்ற பரிசாதகர் யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மனைவியும் கதிர்காகதேவி (யாழ்.கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம் - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஊழியர்), காலஞ்சென்ற அழகானசுந்தரம் மற்றும் நிர்மலா தேவி, நாகபூசணி, காலஞ்சென்ற சிறீநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
*கல்வியங்காடு.* (33841)(36-12-17) குடும்பத்தினர்.

### திருமதி தில்லையம்பலம் சிவக்கொழுந்து



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (05.07.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் மனைவியும் ஞானாம்பிகை காலஞ்சென்ற சிவஞானம், காலஞ்சென்ற சங்குமதி, ஞானலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் சங்கரப்பிள்ளை, தெய்வேந்திரம் காலஞ்சென்றவர்களான இராசையா, யோகம்மா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மாமியாரும் மகாலிங்கம், அமிர்தலிங்கம், அருள்நாயகி, வரதலிங்கம், தனபாலு, விமலதாசன், யோகநாயகி, ஞானலிங்கம், சிவகாந்தன், முரளீஸ்வரன் (ஈசன்), கிருஸ்ணேஸ்வரன் (நேசன்), பானுமதி, சந்திரமதி, சுவேந்திரன் (குமரன்), வரதலட்சுமி, யோகலட்சுமி, விமலசூரியன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு அல்லைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கிருஸ்ணேஸ்வரன்
(நேசன் - பேரன்).

(33845)(36-12-17)

### கந்தையா சுப்பிரமணியம்



(முன்னாள் முனீஸ்வரன் வெல்டிங் வேக்ஸ் சொப் உரிமையாளர்)

முத்திரைச்சந்தை நல்லூரைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (05.07.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னா புஸ்பலட்சுமியின் அன்புக் கணவரும் கணேசலிங்கம் (ஜேர்மனி), சுந்தரலிங்கம், சரோஜினிதேவி, ராஜேஸ்வரன் (இந்தியா), சண்முகலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2004) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.36/3ஜமுனா வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (33844)(36-12-17)

தகவல்:
குடும்பத்தினர்.

# குடாநாட்டில் நேற்று எழுச்சியுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது. நெல்லியடி மகாவித்தியாலய அரங்கில் அல்வாய் றோ.க.த. பாடசாலை அதிபர் அ.விஜயநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் உயிராயுதம்-5 ஒலிப்பேழையும், உயிராயுதம்-7,8 ஆகிய ஒலி நாடாக்களும், வெளியிடப்பட்டதுடன் கரும்புலிகளின் காவியம் என்ற நூலும் வெளியிடப்பட்டது.

லெப்.கேணல் ராஜன் அரசியல் கல்லூரி விரிவுரையாளர் அறச்செல்வன், வலிகாமம் கோட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், சட்டத்தரணி ஸ்ரீகாந்தா மற்றும் யாழ். பல்கலைக்கழக எஸ்.சந்திரசேகரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வுகளின்போது இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் நேரில் வந்து கண்காணித்தனர். அதேவேளை, நெல்லியடிப் பொலீஸார் இந்நிகழ்வுகளைப் பார்வையிட்டதுடன், நெல்லியடிச் சந்தியில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகிய போது போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதனையும் அவதானிக்க முடிந்தது.

முன்னதாக, நேற்றுக்காலை வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்வில் தேசியக் கொடியை, எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றி வைத்தார். கரும்புலிகளின் திருவுருவப் படங்களிற்கு வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பணியாளர் கி.பகிதரன் ஈகச்சுடரினை ஏற்றி வைத்தார். மலர்மாலை மாவீரர் துயிலும் இல்லப் பணியாளர் விநாயகமூர்த்தியும் மற்றும் துயிலும் இல்லப் புனரமைப்புக்குழு உறுப்பினர் ஆழ்வாப்பிள்ளையும் அணிவித்தனர். தொடர்ந்து மலர்வணக்கம், அகவணக்கம் என்பன இடம்பெற்றன.

## தீவகம்

கரும்புலிகள் தின தீவகக்கோட்ட நிகழ்வு புங்குடுதீவில் இடம்பெற்றது.

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம் முன்பாக விருந்து பேரணி மாலை 6 மணியளவில் ஆரம்பமானது. 'பாண்ட்' இசைக்குழு முன் செல்ல பேரணி பெருங்காட்டில் அமைக்கப்பட்டிருந்த கரும்புலிகள் நினைவுப் பந்தலைச் சென்றடைந்தது. அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளில் முதன்மைச்சுடரை தீவகக்கோட்ட அரசியல்துறை சிறப்புப் பொறுப்பாளர் கண்ணனும், பொதுச் சுடரை தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கமும் - திலீபன் வைத்தியசாலை மருத்துவ அதிகாரி வண்ணன், நெடுந்தீவுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அவற்றைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

## தென்மராட்சி

தென்மராட்சியில், சாவகச்சேரி பஸ்நிலையம் முன்பாக அமைக்கப்பட்ட நினைவுப் பந்தலில் 261 கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

அங்கு 10 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில், பொதுச் சுடரை தென்மராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகரா, நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் மு.நாகேந்திரராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நினைவுப் பந்தலை யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். பந்தலில் வைக்கப்பட்டிருந்த நினைவுச் சுடரினை யாழ். மாவட்ட எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கமும் பொதுப்படச் சுடரினை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் அரசையாவும் ஏற்றிவைத்தனர்.

பொதுப்படத்திற்கு தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணனும், முதற் கரும்புலி கப்டன் மில்லரின் உருவப் படத்திற்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உப அதிபர் அ.அருந்தவபாலனும், முதல் பெண் கரும்புலி அங்கயற்கண்ணியின் உருவப்படத்திற்கு தென மராட்சிக் கல்விவலய நிர்வாக உத்தியோகத்தர் சீ.பத்மநாதனும் மலர் மாலைகளை அணிவித்தனர்.

பின்னர் ஏனைய கரும்புலிகளின் உருவப் படங்களுக்கு சாவகச்சேரி வர்த்தகர்களும், மாணவர்களும், அரச, கூட்டுறவு ஆகிய திணைக்களப் பிரதிநிதிகளும் மலரஞ்சலி செலுத்தினர். அதனைத்தொடர்ந்து சிறப்புரைகளும் இடம்பெற்றன.

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக முன்றிலில் நா.பிறேம்குமார் தலைமையில் கரும்புலிகள்தின நிகழ்வு இடம்பெற்றது. இதில் கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் பொ.பத்மநாதன் பொதுச்சுடரையும், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் அ.சுதாஸ் தேசியக் கொடியையும், கரும்புலி மேஜர் திலகனின் சகோதரர் எஸ்.குணசேகரம் ஈகச்சுடரையும் ஏற்றினர்.

யாழ். மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் கலைவிழி பொதுச்சின்னத்திற்கு மலர்மாலை அணிவித்தார். சிறப்புரைகளும் இடம்பெற்றன.

காரைநகரில் புதுறோட்டு சந்தி மற்றும் காரைநகர் வேம்படி ஆகிய இடங்களில் இருந்து இரு பேரணிகள் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் நேற்று மாலை 4.30 மணியளவில் காரைநகர் கதிர்காமசுவாமி கோவில் முன்றிலை வந்தடைந்தன.

இதில் பொதுச்சுடரினை கடற்கரும்புலி கப்டன் றோசாவின் தந்தை பொ.கணேசன் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றினார்.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

## கிளிநொச்சி

- கிளிநொச்சியில் கரும்புலிகள் தின நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பிரதேச சபை வளாகத்தில் ஆரம்பமாகியது. இதில் தேசியக் கொடியைக் கேணல் கிட்டு பீரங்கி படைப்பிரிவு மகளிர் பொறுப்பாளர் செல்வி பவநிதி ஏற்றிவைத்தார். ஈகச் சுடரினை கரும்புலி மாவீரர் கதிரவனின் பெற்றோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து உரைகளை தமிழீழ கல்விக்கழகத துணைப் பொறுப்பாளர் அருள், கனகாம்பிகைகுளம் பாடசாலை ஆசிரியரும் கல்வி மேம்பாட்டுப் பேரவை செயலாளருமான அபராஜிதன், கிளிநொச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் சிறப்புரை வழங்கினார்.

(ஒ-3-5-15-17-31-72-117-139-301)

# ஆயுதங்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதித்தார் என்றும் -

அவர்களிடம் ஆயுதம் இருந்தமை தனக்குத் தெரியாதென்றும் - மேற்படி பிக்கு தெரிவித்துள்ளார். (ஒ)

# புலிப் போராளிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்த்து விட்டுத் தப்பி ஓடிவிட்டனர்.

அந்தப் பகுதியில் பணியில் இருந்த பொலீஸாரோ, போக்குவரத்துப் பொலீஸாரோ எந்த வித நடவடிக்கையும் எடுக்காது பார்த்துக் கொண்டு நின்றனர் எனச் சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர்.

அங்கு கூடிய பொதுமக்கள் உடனடியாக காயமடைந்த இருவரையும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சேனாதிராஜாவுக்கு கழுத்திலும், நெஞ்சிலும், தலையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர் அவசர சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். அவரின் நிலை கவலைக்கிடமாக இருந்தது.

அதேவேளை, சுமார் அரை மணி நேரம் கழித்து மட்டக்களப்பு வாழைச்சேனையில் உள்ள வீதியில் மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு போராளிகளை நோக்கித் திடீரெனத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பின்னால் மோட்டார் சைக்கிளில் விரைந்து வந்த இனந்தெரியாதோரே அவர்கள் மீது கைத் துப்பாக்கியால் வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச் சென்றனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் 18 ஆவது மைல் கல்லுக்கு அருகில் - வந்தாறு மூலை கத்தோலிக்க தேவாலயத்துக்கு முன் - நடந்த இந்தச் சம்பவத்தில் முறிஞ்சன் என அழைக்கப்படும் கோணேஸ் ரவிச்சந்திரன் (வயது 33 - கல்முனை) என்ற போராளி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவரது தலையிலும், வயிற்றின் வலது புறத்திலும், இடது கையிலும் சூடுகள் விழுந்துள்ளன.

ரொஷான் அல்லது ஈஸ்வரன் என அழைக்கப்படும் கனகரத்தினம் ஈஸ்வரகுரு (வயது 34) என்ற போராளி காயமடைந்துள்ளார். அவரது வலதுகையை வேட்டு பதம்பார்த்துள்ளது.

(க-3)



வடமராட்சியில் இடம்பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வில் கப்டன் மில்லரின் தாயார் சுடர் ஏற்றுவதையும் கரும்புலிகளின் பொதுப்படத்துடன், முதல் ஆண், மற்றும் பெண் கரும்புலிகளின் படங்களும் பேரணியில் எடுத்துவரப்படுவதையும் பேரணியில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:வசந்தன்)*

# போரைத் தொடங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் குறித்து அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இவ்விரு சம்பவங்களும் ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெற்றுள்ளன. ஏற்கனவே இவ்விதமான படுகொலைகள் ஸ்ரீ லங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் படுகொலைகள், மிரட்டல்கள் நடைபெறாமல் தடுப்பது ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என நாங்கள் பல சந்தர்ப்பங்களில் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினருடன் தொலைபேசி மூலமும், பேச்சுக்களின் போதும் வலியுறுத்தியுள்ளோம். ஆனால், இவ்வறிவித்தலை ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையினர் கரிசனையாக எடுத்துக்கொள்ளவில்லையென எமக்குத் தோன்றுகின்றது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கையாக இவற்றை மேற்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழிவகை செய்த வண்ணம் இருக்கின்றனர் என்பது இச்சம்பவங்களால் புலனாகிறது. இச்சம்பவங்களைப் பாரிய யுத்தநிறுத்த மீறல்களென விடுதலைப் புலிகள் கருதுவதோடு, இதை வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

நாங்கள் மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு சமாதான ஒப்பந்தத்தை மதித்துப் பேணிக்காப்போம் என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகின்றோம்.

எம்மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால் நாம் அதை எதிர்கொள்ளத் தயார் என்று ஆணித்தரமாகவும் கூறுகின்றோம் - என்று உள்ளது.

(க-3)

# மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அரசு திடமான பற்றுறுதியுடன் இருக்கையில், இத்தகைய சம்பவங்கள் அதனைப் பாதிக்கும்.

இந்தக் குற்றங்களின் சூத்திரதாரிகளை அடையாளம் காண்பதற்கான புலனாய்வுகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். - என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சூல சேனவிரத்னவை கிழக்கு நிலைமைகளைக் கண்டறிவதற்காகக் கிழக்கு மாகாணத்துக்கு - குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்துக்கு - இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட அனுப்பிவைத்துள்ளார் என்றும் -

அப்பிரதேச பாதுகாப்பு நிலைவரத்தை பரிசீலனை செய்யும்படியும் விடுதலைப் புலிகளுக்கும், ஏனைய ஆயுதப்பிரிவுகளுக்கும் இடையில் மேலும் மோதல் நிகழாமல் தவிர்ப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக் கும்படியும் அவர் கேட்கப்பட்டுள்ளார் என்றும் - நடவடிக்கைத் தலைமைச்செயலகம் நேற்று விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

A/L 2006 LOGIC
அனுமானம்
ஆரம்பம்: 07.07.2004 புதன்-4p.m.
By: P.கமல் BRIGHTMAN

VACANCY
Ms OFFICE Instrotor
Type Setter
SKY Computer (Pvt) Ltd.
89, Kandy Road, Chundikuli,
Jaffna (Near Kachcheri).
(சி.36216)(40-12-17)

NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம்
A/L Repeat
(வெளிமாவட்ட மாணவர்களுக்கானது)
ஒரு தளவிசைகள்
திங்., செவ். 4.30-6.00
ஆரம்பம்: 06.07.2004 (ப.நேரம்) (இன்று)
By:P.Senthilnathan B.Sc.
(சி.36216)(40)

விற்பனைக்கு
உலகின் முதல்தரம் வாய்ந்த
உற்பத்தியான 'Gestetner' ரக
றோனியோ இயந்திரம்
உடன்விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-B.கிருஷ்ணஜோதி,
பத்திரகாளி கோயில்முன் ஒழுங்கை,
பருத்தித்துறை.
(33817)(17-12-40)

IBMS
மாணவர்களுக்காக
வட இலங்கையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்கிவரும் முன்னணி நிறுவனமாகிய நாம் எமது மாணவர்களிடையே கணனி அறிவின் முக்கியத்துவத்தினை உணர்த்தி அவர்களின் கணனிக் கல்விக்கு வழிகாட்டி வருகின்றோம். அந்த வகையில் கணனிக் கல்வி கற்க ஆர்வம் இருந்தும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்காக எமது முகாமையின் தீர்மானத்திற்கமைய கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம். ஆர்வமுள்ள மாணவர்கள் இத்திட்டத்தில் பங்குபற்றிப் பயனடையுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
மேலதிக் விவரங்கள்:
07.07.2004 உதயனில்...!
இயக்குநர்,
IBMS
# 410, K.K.S. Road, Jaffna.
(C-36202)(40-17-12)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.